JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 5 | ஜுலை 2022 | ஆண்டு சந்தா ₹100/




# மன்னிப்பு

வாலிபர் உலகம்

# INDEX


04 பிரகாசமான வாழ்க்கை...

10 மன்னிப்பு

24 வெறுமையான கல்லறையில் பேதுரு

30 Red Alert


**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** எபினேசர் | டேவிட்சன் | செல்வி | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா



# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!
இன்றைய சூழலில் மனிதனின் மன்னிக்கும் தன்மை முற்றிலும் மாறி, மறைந்துக் கொண்டிருக்கிறது. மன்னிப்பு என்றால் என்ன என்பது போல மனிதர்களின் மனநிலையில் பல மாற்றங்கள். இந்த 5 எழுத்து வார்த்தையான மன்னிப்பு, இல்லாமையால் குடும்பங்களில் ஏற்படும் பிரிவுகளுக்கும், உறவுகளில் ஏற்படும் சிதைவுகளுக்கும் அளவே இல்லை. ஒரு பக்கம், மணமுறிவுகளும், பிரிவுகளும் அதிகமாகிக் கொண்டிருக்க, மறுபக்கம் மன்னிக்க முடியாததால் ஏற்படும் கொலைகளும், வன்முறைகளும், இரத்தம் சிந்துதலும் குறைந்தபாடு இல்லை. மனிதனால் மன்னிக்கவே முடியாது என்ற தன்மையை இன்றைய சூழல் உருவாக்கி விட்டது,



ஆனால் மன்னித்தால் மறுவாழ்வு கிடைக்கும், அல்லது மனந்திரும்ப வாய்ப்பு கிடைக்கும் என்று கற்றுக் கொடுத்தவர் இயேசு. இரத்தம் சொட்ட ஒரு பெண்மணியை கல்லெறிந்துக் கொண்டே வந்த மூர்க்க மனிதர் முன், கல்லெறியாமல் ஆக்கினைக்குள்ளாக அவளை தீர்க்காமல், அவளுக்கு மன்னித்து மறுவாழ்வு கொடுத்தார். இன்றைக்கு இயேசுவின் ஒரு துளி இரத்தம், என் பாவத்தை எல்லாம் மன்னித்தது போல, நானும் மன்னிக்க வேண்டுமே என்ற எண்ணம் அற்றுப் போயிற்று. பரமண்டல ஜெபத்தில் முக்கிய வரிகளான மன்னிப்பை, அவரசத்தோடு சொல்லும் நாம் அதின் ஆழமான கருத்தை மனதில் ஏற்பதில்லை.

வேதத்தில் பல இடங்களில் மன்னிப்பின் மேன்மையை நாம் கவனித்திருக்கலாம். ஆனால் அந்த மன்னிப்பை நம் வாழ்வில் பிரதிபலிக்க தவறியது மிகவும் வேதனையான ஒன்று. வேதத்தில் தனக்கு தன் சகோதரர்கள் இளைத்த அனைத்து துரோகத்தையும் யோசேப்பு மன்னித்தான். தன் சொந்த சகோதரர்களால் தகப்பனிடமிருந்து பிரிக்கப்பட்டு, குழியில் போடப்பட்டு, விற்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டு, அவதிப்பட்டு, தவறாக குற்றச்சாட்டப்பட்டு, நன்மை பெற்றவர்களால் மறக்கப்பட்டு, தன் வாலிப நாட்களில் 13 ஆண்டுகள் சிறையிலும், அவமானத்திலும், அடிமைத்தனத்திலும் இருந்தான். ஆனாலும் தனக்கு துரோகம் செய்தவர்கள் தன் கண்முன்னாடி மண்டியிட்டு கிடந்த போதும், தனக்கு தேசத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி அவர்கள் ஒவ்வொருவரையும் சித்திரவதைப்படுத்த அதிகாரமும், வல்லமையும் இருந்த போதும் அவர்களை மன்னித்தது, யோசேப்புக்கு தேவன் கொடுத்த கிருபை.

அதேபோல் நாமும் மன்னிக்க முயல்வோம். அப்படி ஒரு மன்னிப்பை கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் (Gladys Staines) தன்னுடைய கணவரையும் (கிரஹாம் ஸ்டெயின்ஸ்), இரண்டு சிறு மகன்களையும் கொன்ற நபருக்கு வழங்கினார்கள்.

இதை வாசிக்கும் வாலிபனே, உன்னைப் போன்ற வாலிபர்களும் ஆண்டவரின் மன்னிப்பை அறியாமல், உணராமல் இருப்பதால் தான் பிறரை மன்னிக்கவோ, செய்த குற்றத்தை மறக்கவோ முடியவில்லை.

**நீ சந்தித்த அந்த கல்வாரி அன்பின் மன்னிப்பை பலர் இன்னும் கேள்விப்படவே இல்லை. இன்னும் பல இலட்சங்களும், கோடிகளும் அந்த கல்வாரியின் அன்பை காணவும், உணரவும் உன் பங்கு என்ன?**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# பிரகாசமான வாழ்க்கை...



சாட்சி: நேர்காணல் ஜிஷ்யா

***ஜிஷ்யா:*** ஹாய்! ஆகாஷ்!... எப்படி இருக்கிறீங்க... உங்களைப் பார்ப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்...

**ஆகாஷ்:** ஹாய் அக்கா, நான் நன்றாக இருக்கிறேன்... நீங்க எப்படி இருக்கிறீங்க... உங்களை பார்ப்பதில் எனக்கும் மிகுந்த சந்தோஷம்.



சகோ. ஆகாஷின் குடும்பம்

***ஜிஷ்யா:*** ஓகே... ஆகாஷ், சிறுவயதில் நீங்க நிறைய பாவக் காரியங்களுக்கு அடிமைப்பட்டிருந்தீர்கள் என்று நீங்கள் பேசும் போது என்னிடம் சொன்னீர்கள். அதிலிருந்து எப்படி விடுபட்டீர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு நான் மட்டுமல்ல, வாலிபர் உலகம் சந்தாதாரர்கள் மிகவும் ஆவலாக காத்திருக்கிறார்கள். நீங்களும் ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்.

**ஆகாஷ்:** ஆமாம் அக்கா, நானும் மிகவும் ஆர்வமாகவும், ஆயத்தமாகவும் இருக்கிறேன். நீங்க கேளுங்க அக்கா...

***ஜிஷ்யா:*** சரி ஆகாஷ்... முதலாவது உங்களுடைய குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

**ஆகாஷ்:** எனது அம்மா லட்சுமி தேவி எனக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருக்கிறார்கள். எனது அக்கா படித்துக் கொண்டிருக்கிறாள். தம்பி, தங்கையும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனது அம்மா சிறு வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார்கள். எனது தகப்பனார் நான் 6ம் வகுப்பு படிக்கும் போது, வியாதிப்பட்டு மரணமடைந்து விட்டார். இது தான் என்னுடைய அழகான குடும்பம்.

***ஜிஷ்யா:*** சரி, ஆகாஷ்... உங்களது சிறுபிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

**ஆகாஷ்:** நான் ஜார்கண்ட் மாநிலத்தில் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்தேன். எல்லா தெய்வத்தையும் வணங்குவேன். எனது பிறந்த நாளுக்கு கோயிலுக்கு சென்று தேங்காய் உடைத்து நெற்றியில் பட்டை போட்டு மிகவும் பக்தியுடன் என் பிறந்த நாளைக் கொண்டாடுவேன். பிரசாதம் வாங்கி என் நண்பர்களுக்கு கொடுத்து மகிழுவேன். சிறுவயதில் நண்பர்களுடன் சேர்ந்து விளையாட்டுத் தனமாக கோயிலில் காசு திருடுவோம். இப்படி கொஞ்சம் சுட்டித்தனமும், பக்தியுடனும் இருப்பேன்.



**ஜிஷ்யா:** சிறுவயதில் பக்தியுடன் இருந்தீர்கள் என்று சொன்னீர்கள்... உங்கள் பள்ளிப் படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?

**ஆகாஷ்:** எனக்கு ஆங்கில பாடம் பிடிக்கவேப் பிடிக்காது. எனவே எனக்கு தண்டனையாக எல்லா ஆங்கில வகுப்பிலும் வெளியே நிற்க வைப்பார்கள். எனக்கு ஆங்கிலம் வாசிக்கவேத் தெரியாது. எனது தகப்பனார் அதிகமாக மது அருந்துவார்கள். இதனால் எங்களது குடும்பத்தில் சமாதானம் இருக்காது. என் தகப்பனார் என் நண்பர்களுடன் விளையாடக் கூடாது என்று என்னை அடிப்பார். மாத்திரமல்ல இரும்பு கம்பி வைத்து என்னுடைய வலது கையில் சூடு போட்டார். அந்த தழும்பு இன்னும் என் கையில் இருக்கிறது. இதனால் நான் படிப்பதில் கவனம் செலுத்தாமல், படிக்க ஆர்வமில்லாமல் பள்ளிக்கு செல்வதையே நிறுத்தி விட்டேன்.



**ஜிஷ்யா:** சிறுவயதில் குடும்பத்தில் சமாதானம் இல்லை... படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை... உங்கள் சிறுவயதில் நடந்த மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது சொல்லுங்களேன்?

**ஆகாஷ்:** 2011ம் வருடம் என் தந்தைக்கும் தாய்க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் தாயும் நாங்களும் மதுக்காம் என்னும் இடத்திற்கு குடிபெயர்ந்தோம். அதன் பிறகு என் தந்தை இன்னும் அதிக அளவில் குடிக்க ஆரம்பித்து, வயிற்று வலியால் மிகவும் அவதிப்பட்டார். 2012ம் வருடம் மே மாதம் 21ம் நாள் என் தந்தை மருத்துவமனையில் மரித்து விட்டார்கள். தகப்பனை இழந்தது என்னை அதிகமாக வாதித்தது. போதைப் பொருட்களை பயன்படுத்தினதினால் தான் என் தகப்பனார் இறந்தார். எனவே நான் போதைப் பொருட்களை எடுக்கக் கூடாது என்று அந்த சிறுவயதிலேயே ஒரு தீர்மானம் எடுத்தேன். மதுக்கம் பகுதியில் இருந்த போது, எனக்கு நண்பர்கள் இல்லை. நன்றாகத் தான் போய்க் கொண்டிருந்தது. எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை. என் குடும்பத்துக்கும் கீழ்ப்படிதலுள்ள மகனாகத் தான் வாழ்ந்து வந்தேன்.

**ஜிஷ்யா:** சூப்பர்... நல்ல தீர்மானம் எடுத்தீர்கள்... அந்த தீர்மானத்தில் கடைசி வரை நிலைத்திருந்தீர்களா?

**ஆகாஷ்:** இல்லை... கொஞ்ச நாட்களில் எனக்கு அநேக நண்பர்கள் கிடைத்தார்கள். வீடியோ கேம் விளையாடும் பழக்கம் உருவானது. என் அம்மா கடையில் பொருள் வாங்க காசு கொடுத்தால், அதில் மீதமுள்ள காசை பத்திரப்படுத்தி வீடியோ கேம் விளையாட செலவழிப்பேன். நண்பர்களோடு பழக பழக புகைப்பழக்கத்திற்கும், போதைப் பாக்குகள் உபயோகிப்பதற்கும் அடிமையானேன். அதிகமாக கெட்ட வார்த்தைகள் பேசி, அவர்களோடு சந்தோஷமாக இருப்பது தான் மகிழ்ச்சி என்று நினைத்து அதிகமாக கெட்ட வார்த்தைகள் பேசுவேன். நான் சிறுவயதில் எடுத்த தீர்மானத்தில் என்னால் நிலைத்திருக்க முடியவில்லை. ஒழுங்காக படிக்காததாலும், நண்பர்களோடு சேர்ந்து கெட்ட பழக்கத்திற்கு அடிமையாவதாலும் வேலைக்கு செல்ல என் தாயார் கட்டாயப்படுத்தியதால் ஒரு ஜீன்ஸ் கம்பெனியில் வேலைக்கு சென்றேன். அங்கு கொஞ்ச நாட்கள் தான் வேலை செய்தேன். அதன் பிறகு மெடிக்கல் கடை, துணிக்கடை என்று அநேக இடங்களில் வேலை பார்த்தேன். எங்கும் நிலைத்து நிற்க முடியவில்லை. எந்த இடத்திலும் வேலைக்கு நான் ஒழுங்காக செல்லவில்லை. அங்கும் நண்பர்களோடு இணைந்து இன்னும் அதிகமான போதைக்கு அடிமையானேன். போதைப் பொருட்கள் வாங்க காசு இல்லை என்றால் போதை தரக்கூடிய மற்றப் பொருட்களை பயன்படுத்துவேன். வேலைக்கு செல்வது போல சென்று நண்பர்களுடன் இணைந்து போதைப் பொருட்களை பயன்படுத்தி பக்கத்தில் உள்ள கட்டிடத்தில் சந்தோஷமாக இருப்போம். என் நிலமையைப் பார்த்த என் குடும்பம் மிகவும் வேதனைக்குள்ளானார்கள். எனது சித்தி ஒருவர் நான் பாவ அடிமைத்தனத்திலிருந்து வெளிவர வேண்டும் என்று பாரத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.



**ஜிஷ்யா:** சித்தி ஜெபிக்க ஆரம்பித்தார்கள்... சித்தியின் ஜெபம் கேட்கப்பட்டதா? இந்தபழக்கத்திலிருந்து எப்படி விடுவிக்கப்பட்டீர்கள்?

**ஆகாஷ்:** 2017ம் ஆண்டு நாங்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு, கர்த்தருக்கு சாட்சியாக வாழ உதவி செய்து

வருகிறார். மதுக்கம் பகுதியில் எனக்கு கெட்ட நண்பர்கள் அதிகமாக இருந்ததால் 4 வீடு மாறினோம். எனது சிறுவயதில் என் பாட்டி ஊருக்கு செல்லும் போது ஆலயத்திற்கு சென்றிருக்கிறேன். ஆகையால் எனக்கு மனசு சரியில்லாமல் இருக்கும் போது எங்கள் ஊரில் உள்ள ஆலயத்திற்கு அடிக்கடி செல்வேன். ஆனாலும் என்னுடைய கெட்டப்பழக்கங்கள் மாறவில்லை. ஒரு ஹோட்டலில் தட்டு, டம்ளர் கழுவும் வேலைக்கு சேர்ந்தேன். ஒருநாள் ஹோட்டலில் இருக்கும் போது என் பாவங்களை உணர்ந்து, அந்த பாவங்களிலிருந்து வெளிவர விரும்பினேன். அந்த ஹோட்டலில் இருக்கும் போதே, எனக்கு இந்த ஹோட்டல் வேலை வேண்டாம், எனக்கு வேறு நல்ல வேலை தாரும் ,எந்த வேலையாக இருந்தாலும் நான் செய்கிறேன் என்று ஜெபித்தேன். நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசியான பிறகு நானும் ஊழியம் செய்ய வேண்டும் என்று வாஞ்சை வந்தது. அதற்காகவும் ஜெபித்தேன். ஜார்கண்ட் இயேசு விடுவிக்கிறார் அலுவலகத்திற்கு அடிக்கடி செல்வேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டார்.



***ஜிஷ்யா:*** சூப்பர்... கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு குடும்பமாக இரட்சித்தார்... தற்பொழுது என்ன செய்கிறீர்கள்?



**ஆகாஷ்:** என்னுடைய கெட்ட நண்பர்களை விட்டு எப்படியாவது பிரிய வேண்டுமென்று விரும்பினேன். அந்த நேரத்தில் 2017ம் வருடம் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் ஜார்கண்ட் வந்த போது, எந்த வேலையாக இருந்தாலும் நான் செய்கிறேன். எனக்கு ஏதாவது வேலை தாருங்கள் என்று கேட்டேன். உடனே அதில் ஒரு அண்ணன் மோகன் அங்கிளிடம் கேட்டு, என்னை இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தில் இணைய சொன்னார்கள். நான் உடனே கிளம்பி நாலுமாவடி வந்தேன். எனக்கு பாஷை தெரியாது. மீடியா பற்றி எதுவும் தெரியாது. ஆனால் கர்த்தர் என்னை தெரிந்தெடுத்து தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து மீடியா துறையில் பயன்படுத்தி வருகிறார். 5 வருடமாக முழு நேரமாக ஊழியம் செய்து வருகிறேன்.

***ஜிஷ்யா:*** சூப்பர்... மொழி தெரியாது, மீடியா பற்றி எதுவும் தெரியாமல் வந்த உங்களை, கடந்த 5 வருடமாக எழுப்புதலின் பணிக்காக பயன்படுத்தி வருகிறதை பார்க்கும் போது, மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

**ஆகாஷ்:** எனக்கும் மிகவும் சந்தோஷம்... ஊழியத்தில் இன்னும் நிறைய கற்றுக் கொண்டு ஆண்டவருக்காக இன்னும் வைராக்கியமாய் செயல்பட வேண்டும் என்பதே என் வாஞ்சை.

***ஜிஷ்யா:*** சரி... இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?

**ஆகாஷ்:** வழியில்லாத இடத்தில் வழியை உண்டு பண்ணுகிற கர்த்தர் உங்களோடும் இருக்கிறார். என் பாவப் பழக்கங்களிலிருந்து விடுதலை கிடைக்குமா என்று தாகத்தோடு ஜெபித்த போது, என் ஜெபத்தை கேட்டு கொடுக்க இயேசுவால் முடியுமானால், இன்றைக்கு நீங்களும் ஏதோ அடிமைத்தனத்தில் சிக்குண்டு, அதிலிருந்து வெளிவர வேண்டுமென்று ஆசைபடும்போது, கர்த்தர் உதவி செய்வார். முதலாவது நீங்கள் அதிலிருந்து வெளிவர முயற்சிக்க வேண்டும். கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு கேட்கும் போது கர்த்தர் விடுதலை கொடுப்பார்.

**பாருங்கள், ஆகாஷ் வாழ்க்கையை ஒரு பிரகாசமுள்ள வாழ்க்கையாக மாற்ற முடியுமானால், நீங்கள் கேட்கும் போது எப்பேர்ப்பட்ட பாவ பழக்கங்களிலிருந்தும் விடுதலை கொடுத்த பிரகாசமான வாழ்க்கையை தரமுடியும். நீங்களும் கேட்டு முயற்சியுங்கள். ஆகாஷ் போல பிரகாசமுள்ள வாழ்க்கை வாழ கர்த்தர் கிருபை கொடுப்பார். ■**



வேத ஆராய்ச்சி: ரேச்சல்

# ஓசியா

(அன்பைக் காத்துக் கொள்ளுதல்)

அன்பான இளம் நெஞ்சங்களே! கடந்த மாதங்களில் பெரிய தீர்க்கதரிசன புத்தகங்களைப் பற்றி பார்த்தோம். இந்த மாதமும் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் முதலாவது புத்தகமான "ஓசியா" பற்றிய சுவாரசியமான காரியங்களை சுருக்கமாக காணலாம்.

## அறிமுகம்

ஓசியா எழுதப்பட்ட நோக்கம் இஸ்ரவேல் மக்கள் தொடர்ந்து உண்மையற்றவர்களாயிருப்பினும் தேவனுக்கு அவர்கள் மீதுள்ள உறுதியான அல்லது மாறாத அன்பை வெளிப்படுத்துவதே ஆகும். ஓசியாவின் திருமண அனுபவத்தின் மூலமாக, இந்தப் புத்தகம் அன்பும், மனதுருக்கமுமுள்ள தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது. அவர் தம்மை குறித்தும் தேவனை நெருக்கமாக அறிவது மனிதனுக்கு எத்தகைய அர்த்தத்தைக் கொடுக்கிறது என்பதைக் குறித்துமுள்ள அறிவைக் கொடுப்பதன் மூலம் அவனை ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

ஆசிரியர்: ஓசியா
காலம்: கி.மு. 755 - 715
அதிகாரங்கள்: 14
வசனங்கள்: 197
வார்த்தைகள்: 1, 175
முக்கிய நபர்கள்:
ஓசியா, கோமேர், இஸ்ரவேலின் இராஜா-ஏசுூ

## ஓசியா - சுருக்கம்

இஸ்ரவேலரோடு தேவனின் தொடர்பை சித்தரித்தல்

- ஓசியாவின் குடும்பத்தின் தீர்க்கதரிசன இயல்புகள் (1ம் அதிகாரம்)
- தண்டனை மூலம் பழைய நிலமை அடைதல் (2ம் அதிகாரம்)
- ஓசியாவின் திருமணத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் (3ம் அதிகாரம்)

## ஓசியாவின் செய்தி

இஸ்ரவேலை பழைய நிலைக்குக் கொண்டு வருவதும், நியாயத்தீர்ப்பும்

- இஸ்ரவேலுக்கு எதிராகக் கர்த்தர் (4, 5, 6:1-3 வசனங்கள்)
- இஸ்ரவேலரின் தவறும், தண்டனையும் (6 - 11 அதிகாரங்கள்)
- இஸ்ரவேலுக்கு எதிரான தேவனுடைய வழக்கு முடிவடைதல் (12 - 14 அதிகாரங்கள்)

## ஓசியாவில் கிறிஸ்து

ஓசியாவில் மேசியா,

- தேவனுடைய குமாரனாகவும் (11:1)
- தம்முடைய ஜனங்களின் ஒரே இரட்சகர் (13:14)
- நம் பாவத்துக்கு தம்மையே கொடுத்தவர் (13:14)
- நம்மை மிகுந்த மனதுருக்கத்துடன் நேசிப்பவர் (11:4)
- தம்மிடம் திரும்புகிறவர்களை குணப்படுத்துகிறவர் (6:1)

ஆலோசனை: அலி




## Heart Beat

# Hard Work

# MEMO

நான் ஒரு அரசு அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பேன். என்னுடைய வேலையில் உண்மையாக இருப்பேன். என்னுடைய மேல் அதிகாரி என் வேலையைப் பார்த்து பலமுறை பாராட்டியுள்ளார். ஒருமுறை என் மேல் அதிகாரி; ஒரு முக்கியமான Project முடிக்க முடியாமல் திணறிய போது இரவு பகலாக அவருக்கு உதவி செய்து அதை வெற்றியோடு முடிக்க பெரும் துணையாக நின்றேன். சமீப காலமாக யாரோ என்னைப் பற்றி கூறிய தவறான செய்தியை நம்பி அவர் என்னிடம் கடினமாக பேசி என் மனதை சுக்கு நூறாக உடைத்து விட்டார். மேலும் நான் வேலையில் உண்மையில்லாதவன் என்று சொல்லி எனக்கு Memo-வும் கொடுத்து விட்டார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, யாரோ சொன்ன பொய் குற்றச்சாட்டை அப்படியே நம்பி என்னை தூக்கி எறிந்து விட்டார். ஒரு மாதம் கழித்து உண்மை தெரிந்தவுடன், என் மேலதிகாரி என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டார். என்னால் அவரை மன்னிக்கவே முடியவில்லை. காரணம், அவரால் எனக்கு அவமானம், பதவி உயர்வில் பிரச்சனை என இன்னும் பல இழப்புகளும், வேதனையும் அதிகரித்தது. அடுத்த Manager நான் தான் என்று பல கனவோடு இருந்த எனக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவரை மன்னிக்க முடியவில்லை. மேலும் மன்னித்தாலும் என்னால் மறக்க முடியவில்லை. அந்த வார்த்தைகள் என் காதுக்குள் இன்றைக்கும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை - **ராகுல், மும்பை.**

உங்களுடைய உள்ளான வலியும், வேதனையும் புரிகிறது. ஒரு பக்கம் செய்யாத தப்புக்கு தண்டனை, மறுபக்கம் உண்மையாய் நம்பின Manager செய்த எல்லா உதவிகளையும் மறந்து தூக்கி எறிந்து விட்டாரே என்ற கவலையும் உங்களை வாட்டி வதைக்கிறது.



இதனால் அலுவலகத்தில் ஏற்பட்ட அவமானம், Memo கொடுத்ததால் Black mark ஏற்பட்டு, வர வேண்டிய பதவி உயர்வு தடைபட்டது. உங்கள் வேலை பாதித்த துக்கமும் உங்களை வாட்டி வதைப்பதை உணர முடிகிறது.

ராகுல்! உங்களுக்கு இரண்டு Options உள்ளது. ஒன்று அவரை மன்னிக்காமல், அதை மனதில் வைத்து வேதனையில் வாழ்ந்துக் கொண்டிருப்பது அல்லது அவரை மனதார மன்னித்து, எந்த ஒரு கவலையும் இல்லாமல், வேதனை இல்லாமல் வாழ முயற்சிப்பது. இவை இரண்டில் எதை தேர்வு செய்யப் போகிறீர்கள்.

**ஒருவேளை மன்னிக்காவிட்டால் என்ன நடக்க வாய்ப்பு உண்டு?**

- உங்கள் மனதில் இருக்கும் மன்னியாமை, ஒரு பகையாக மாற வாய்ப்பு உண்டு.
- பின்பு பகை, பழிவாங்கும் படலத்தை நிச்சயம் தொடரும்.
- எனவே அவருக்கு விரோதமாக நீங்கள் பேசுவது, தீமையான வேலைகளை செய்வது போன்ற காரியங்கள் ஏற்படும்.
- பிரச்சனை முற்றி ஒருவேளை நிர்வாகம் உங்களை வேலையிலிருந்து De Promotion அல்லது இடமாற்றம் செய்ய வாய்ப்பு உண்டு.
- இது இன்னும் வேதனையையும், கசப்பையும் உண்டாக்கும்.
- நல்ல நண்பர்களாய் இருந்த நீங்கள், பெரும் விரோதிகளாக மாற வாய்ப்பு உண்டாகும்.

**ஒருவேளை அவரை நீங்கள் மன்னித்தால் என்ன நடக்க வாய்ப்பு உண்டு?**

- அலுவலகத்தில் உங்கள் மீது எல்லோர் மத்தியிலும் ஒரு மதிப்பும், மரியாதையும் உண்டாகும்.
- மேலும் மன்னிக்கும் போது உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவு இல்லை.
- எந்த Manager பொய் குற்றச்சாட்டை நம்பி உங்களுக்கு Memo கொடுத்தாரோ, அவரே உங்கள் Appraisalக்கும் Promotionக்கும் ஒரு mail அனுப்பி, பதவி உயர்வு கிடைக்க உதவ முடியும்.

உங்களுடைய வாழ்க்கையை யோசிக்கும் போது வேதத்தில் தானியேலுடைய வாழ்க்கை தான் ஞாபகத்தில் வருகிறது. அவர் தன் வேலையில் உண்மையாய் இருந்தார். ஏராளமாய் எல்லாவற்றையும் செய்தார். அதனால் ராஜாவுக்கு தானியேல் மேல் அபார நம்பிக்கையும், அன்பும், மரியாதையும் உண்டு. ஆனால் ஒரு தவறான செய்தியை நம்பி ராஜாவே தானியேலை சிங்களின் குகைக்குள் போட கட்டளையிட்டார். மரண தண்டனைக்கு சமமானது சிங்கத்தின் குகை.

ஆனால் தானியேலுக்கு ராஜா மீது சிறிதும் வருத்தமோ, கவலையோ இல்லை. அவர் தவறு செய்யவில்லை என்று தானியேலுக்கு தெரியும். அவர் அமைதியாய் இருந்து, அந்த சிங்கக்கெபியில் பொறுமையாய் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தார். முடிவில் என்ன நடந்தது? அவருடைய உண்மையின் நிமித்தம் சிங்கத்தின் குகையில் இருந்து தானியேல் உயிரோடு வந்தார். கர்த்தர் அவரை பாதுகாத்தார். பின்னர் ராஜா அவரை மிகவும் உயர்த்தினார்.



மன்னிக்கும் போது நாம் மனிதராகிறோம், அதை மறக்கும் போது மகான் ஆகிறோம் என்று சொல்வார்கள். ஆனால் நம்மால் நம்மை காயப்படுத்தியவரை எளிதில் மன்னிக்க முடியாது. ராகுல்! நீங்கள் முயற்சி செய்யுங்கள், தானியேலுக்கு மன்னிக்க உதவி செய்த இயேசு உங்களையும் மன்னிக்க உதவி செய்வார்.

மேலும் அவரை ஆசீர்வதித்து ஜெபிக்கும் போது இன்னும் உங்கள் மனது இலகுவாக வாய்ப்பு உண்டு. எனவே ராகுல், மன்னித்து விடுதலையோடு, சமாதானத்தோடு வாழப் போகிறீர்களா அல்லது பகையோடும், பழிவாங்கும் எண்ணத்தோடும் இருக்கப் போகிறீர்களா? யோசித்து செயல் படுங்கள்! ■

முகப்பு செய்தி: சதீஷ்

# மன்னிப்பு







இன்றைய நவீன உலகில் மன்னிப்பு என்ற சொல் எல்லோராலும் மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. குறிப்பாக கிறிஸ்தவர்களிடையே சண்டைகளும், வாக்குவாதங்களும், குடும்பங்களிடையே பெருகிக் கொண்டே போகிறது. யாரும் யாரையும் மன்னிக்க தயாராக இல்லை. அவன் என்னிடத்தில் மன்னிப்பு கேட்கட்டும், பிறகு நான் அவனை மன்னிக்கிறேன் என்றும், நான் அவனை மன்னிக்க மாட்டேன் என்ற பிடிவாதமும், ஈகோவும் அநேக கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படுகிறது. ஆனால் நம்முடைய வேதம் என்ன சொல்கிறது தெரியுமா?

''...நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து'' (மத். 5:23,24). இது போன்ற சத்திய வசனங்களை இன்றைக்கு பலரும் மறந்து விட்டார்கள் என்பதே வேதனைக்குரியதாகும்.

யாக்கோபு தன் சகோதரன் ஏசாவை வஞ்சித்து தன் தகப்பனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டான். இதனால், ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டானே தவிர கொலை செய்யவில்லை (ஆதி. 27:41). ஆனால் இன்றைக்கு அநேக வாலிபர்கள் தனக்கு கிடைக்கவேண்டிய ஒன்று கிடைக்காவிட்டால் வெறுப்பு அதிகமாகி கொலை செய்யும் அளவிற்கு சென்று விடுகின்றனர். இதனாலேயே நம்மைச் சுற்றி ஆசீட் வீச்சுகளும், கௌரவ கொலைகளும், பகையும் விரோதமும் அதிகமாகிவிட்டது என்றே சொல்லலாம். இவை எல்லாவற்றிற்கும் மூலக் காரணம் மற்றவர்களை மன்னியாமல் இருப்பது தான். இதனால் தான் ஆண்டவர் மனிதனுக்கு மன்னிக்கிற சுபாவம் அவசியம் என்கிறார். ''மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத். 6:14-15 என்றார்.



இருபது வருடங்களுக்கு பிறகு யாக்கோபு ஏசாவை சந்திக்க வரும் போது தான் செய்த தவறை உணர்ந்து தன்னை தாழ்த்தி அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழு விசை தரை மட்டும் குனிந்து வணங்கி தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்த ஏசா யாக்கோபை மன்னித்து,''...எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்;... (ஆதி. 33:4). இப்படி ஒருவருக்கொருவர் மன்னித்து இணைந்ததால் இரண்டு குடும்பங்கள் ஒன்றாகின. இன்று அநேக குடும்பங்கள் பிரிந்து இருப்பதற்கு காரணம் ஒருவரையொருவர் மன்னிக்காமல் இருப்பதுதான். ஒருவேளை நீங்கள் யாரையாவது மன்னிக்காமல் இருந்தாலோ, உங்கள் குடும்பத்தார் மற்றவர்களை மன்னிக்காமல் இருந்தாலோ இன்றைக்கே மன்னிக்கும்படி கேட்டு குடும்ப உறவுகளை பலப்படுத்துங்கள். குடும்பத்தில் தாய் தகப்பன் இடையே ஏற்படும் சண்டைகள் மற்றும் கருத்து வேறுபாட்டால் உண்டாகும் பிரிவினைகள் இவற்றால் சில வாலிபர்களுக்கு தங்கள் பெற்றோர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு அவர்களுடைய தப்பிதங்களை மன்னியாமல் ஒரே வீட்டில் பல வருடங்களாக இருந்து கொண்டு ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்பது வேதனைக்குரிய காரியமாக உள்ளது.



1999ஆம் ஆண்டு கிரஹாம் ஸ்டெயின்ஸ்சும் அவருடைய பிள்ளைகளும் கொடூரமான முறையில் இரக்கமின்றி வாகனத்தில் வைத்து எரித்து கொலை செய்யப்பட்டார்கள். தன் கணவனையும் பிள்ளைகளையும் கொன்றவர்களை நான் மன்னிக்கிறேன் என்று கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் சொன்ன போது அதை கேட்டுக் கொண்டு இருந்த பத்திரிக்கையாளர்களும், தொலைக்காட்சி நிருபர்களும் புருவங்களை உயர்த்தினர். இவரோ ''எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்'' (யோவான் 20:23) என்று சொல்லி இயேசுவை உயர்த்தினார். ஒரு வேளை நீங்கள் யாரையாவது மன்னிக்காமல் இருந்தால் இன்றைக்கே மன்னித்து விடுங்கள்.



இன்றைக்கு அநேக வாலிபர்களுக்குள் இருக்கும் கேள்வி என்னவென்றால்? இயேசு என்னுடைய பாவத்தை மன்னிப்பாரா? மன்னிக்க மாட்டாரா? பாவத்திலும் சாபத்திலும் இருக்கும் ஜனங்களை மீட்கும் படியாகத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும் பாராமல், மனுஷகுமாரனாக இந்தப் பூமிக்கு வந்து சிலுவையை சுமந்து தன்னுடைய சொந்த இரத்தத்தைக் கொடுத்து நம்மை மீட்டு எடுத்தார். மார்ட்டின் லூதர் தன் வீட்டில் தனிமையாய் அமர்ந்து இருந்த போது பிசாசு அவரிடம் வந்து நீ இன்ன பாவங்களை செய்தாய் என்று பட்டியலிட்டு காட்டினான், அவர் அந்தப் பாவங்களை எல்லாம் ஒரு வெள்ளைப் பேப்பரில் எழுதி அந்தப் பேப்பர் முழுவதும் சிகப்பு மையை ஊற்றினார். இப்பொழுது சாத்தான் சொன்ன எந்த பாவ பட்டியலும் அதில் இல்லை. மார்ட்டின் லூதர் சாத்தானைப் பார்த்து, இதுபோலவே இயேசுவின் இரத்தம் என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னிக்கிறது என்றாராம். உடனே அவன் அவரை விட்டு விலகி போனான். ''...குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1 யோவான் 1:7). வாசித்துக் கொண்டு இருக்கிற நீங்கள் இயேசு என் பாவத்தை மன்னிக்கமாட்டார், நான் ஒரு பாவி என்று சொல்லிக் கொண்டு இயேசுவை விட்டு தூரம் போய் இருந்தால், இன்றைக்கு இயேசு உங்கள் பாவத்தை மன்னிக்க ஆயத்தமாக இருக்கிறார். நீங்கள் அவரை நோக்கி கூப்பிட ஆயத்தமாக இருக்கிறீர்கள், அவரை நோக்கி கூப்பிடுங்கள் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்.

**எனக்கன்பான வாலிப சகோதர / சகோதரிகளே! உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதா என்ற கேள்வி எழும்பும் போது, நான் இயேசுவை விசுவாசிக்கிறேன், இயேசுவின் இரத்தம் எனது எல்லா பாவங்களையும் மன்னித்து விட்டது என்று அறிக்கையிடுங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9)** ■





செய்தி: மோகன் சி.லாசரஸ்

# யாக்கோபின் ஆசீர்வாதம்!

**“யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று. அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்” (ஆதி. 32:24-28). இரவெல்லாம் போராடி முழு இரவு ஜெபம் செய்த முதல் மனிதன் இந்த யாக்கோபு. அந்த சம்பவம் தான் இந்த வேதபகுதியில் வாசிக்கிறோம்.**

ஏன் அவன் முழு இரவு ஜெபம் செய்தான்? இருபது வருடங்களுக்கு முன்னால் யாக்கோபு ஏசாவை ஏமாற்றி விட்டு போனதினால் அவனுக்குள் வஞ்சகம் காணப்பட்டது. அதனால் யாக்கோபுவைக் கொன்று போடுவேன் என்று அவன் வைராக்கியமாய் இருந்தான். இருபது வருடங்களாக சம்பாதித்துக் கொண்டு வந்த சொத்துக்கள், மிருக ஜீவன்கள், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் என்று பெரிய திரளான ஐசுவரியத்தோடு யாக்கோபு சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறான். ஏசா பெரும் கூட்டத்தோடு வருகிறான் என்ற செய்தியைக் கேட்டவுடன், யாக்கோபுக்குள் பெரிய பயம் உண்டானது. இந்த சூழ்நிலையிலிருந்து தப்பிப்பதற்கு தேவனோடு தனித்திருப்பது தான் ஒரே வழி என்பதை அறிந்தான். ‘‘இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு



மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பிள்ளை களையும் கூட்டிக்கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான். யாக்கோபுக்கு நான்கு மனைவிமார்கள், இரண்டு பணி விடைக்காரிகள், பதினொரு குமாரர்கள், தீனாள் எனகிற ஒரு குமாரத்தியும் இருந்தாள். அவர்கள் யாப்போக்கு என்கிற ஒரு சின்ன நதியை கடந்துவிடலாம் என்று சொல்லி, எல்லாரையும் வேக வேகமாக கடக்கப்பண்ணி, அக்கரைப்படுத்தின பிறகு அவன் கர்த்தரின் சமூகத்தில் தனித்திருந்தான்.

யாக்கோபு தனித்து நிற்கும் போது தன் மனைவிகளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ, பிள்ளைகளுக்கு ஏதாவது

ஆகிவிடுமோ, நம் உயிருக்கு ஏசாவால் ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்ற கலக்கத்தில் இருக்கும் போது கர்த்தர் அவனை சந்திக்கிறார். இந்த சூழ்நிலையில் அவன் ஆண்டவரோடு தனியாக போராடுகிறான். நான் ஜெயிக்க வேண்டும், நான் மேற்கொள்ள வேண்டும், என் மனைவி பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற நிலைமையில் அவன் தனித்து போராடுகிறான். நீர் என்னை ஆசீர் வதித்தால் ஒழிய உம்மை போகவிடேன் என்று யாக்கோபு ஜெபித்தது ஒரே ஜெபம் தான்.



யாக்கோபுக்கு என்ன ஆசீர்வாதம் வேண்டும்? ஒன்றுக்கு நான்கு மனைவிமார்கள், பதினொரு மகன்களும், தீனாள் என்கிற ஒரு மகள், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் என்று எல்லாமே இருக்கிறது. அவனுக்கு பரிசாக கொடுத்த ஆடு, மாடு எல்லாம் இப்போது உள்ள மதிப்புக்கு கணக்கு போட்டால் கோடிக்கு மேல் வரும். வெறும் கையோடு ஆற்றங்கரைக்கு போனேன், இப்போது பரிவாரங்களோடு வந்திருக்கிறான் என்றால் யாக்கோபு பெரிய கோடீஸ்வரன். பிறகு என்ன ஆசீர்வாதம் வேண்டும்? நீர் என்னை ஆசீர்வதித்தால் ஒழிய உம்மை போகவிடேன் என்று சொல்கிறான் என்றால், என்ன ஆசீர்வாதத்திற்காக அவன் போராடி இருப்பான்? கர்த்தர் புதிய பெயரை சொல்லி ஆசீர்வதித்து விட்டார். யாக்கோபுக்கு பெரிய சந்தோஷம். யாக்கோபு என்கிற பெயருக்கு யத்தன், ஏமாற்றுகிறவன் என்று அர்த்தம். ஆனால் கர்த்தர் இனி உன் பெயர் யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும் என்று சொல்லி ஆசீர்வதித்தார். பிறக்கும் போதே அவன் யத்தனாக தான் பிறந்தான். தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே ஏசாவின் குதிகாலை பிடித்து, நான் முந்தி போக வேண்டும் இல்லாவிட்டால் சேஷ்டபுத்திர பாகம் போய்விடுமே என்று எண்ணி, அவன் குதிகாலை பிடித்து கர்ப்பத்தில் சண்டை போட்டவன் தான் யாக்கோபு. பிறக்கும் போது அவனுடைய குதிகாலை தான் பிடிக்க முடிந்தது, அவனால் முந்தி வரமுடியவில்லை.



இஸ்ரவேல் மக்கள் மத்தியில் முதலில் பிறக்கும் மகனுக்கு சொத்தில் இரண்டு மடங்கு சொத்தை கொடுக்கப்பட வேண்டும். சேஷ்டபுத்திர பாகத்தையும் மூத்தவனுக்கு கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. அதனால் அந்த ஆசீர்வாதத்திற்காக அவன் ஏங்கினான். ஏசா முதலாவது பிறந்தும்கூட இந்த ஆசீர்வாதத்தைக் குறித்து சிந்தையே இல்லாமல் ஒரு கப்பு கூழுக்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தையே இழந்து விட்டான். கர்த்தர் தனக்கென்று கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்தை உணர்ந்து கொள்ளாமல் அசட்டைப் பண்ணினான் என்பதாக வேதத்தில் பார்க்கிறோம். ஆனால் யாக்கோபு அந்த ஆசீர்வாதத்தின் மேல் கண் வைத்திருந்தான். அவன் யத்தனாக ஏமாற்றுகிறவனாக இருந்தாலும், அந்த சேஷ்டபுத்திர பாகம் எனக்கு வேண்டும், ஆண்டவர் கொடுக்கிற ஆசீர்வாதம் எனக்கு வேண்டும் என்று தேவன் கொடுக்கிற ஆசீர்வாத்தின் மேல் அவனுக்கு அக்கரையும், கரிசனையும், தாகமும் இருந்தது. தேவன் அதை பார்த்து அவனை ஆசீர்வதித்தார்.

மூத்த மகனுக்கு தான் அந்த ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்பதை அறிந்திருந்த ரெபேக்காளும் தந்திரமாக இவனை தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள, ஏசாவின் கைகளில் ரோமங்கள் இருப்பதை போல், யாக்கோபினுடைய கைகளில் ஆட்டுத் தோலை போர்த்தி, தகப்பனாரிடம் அனுப்பி, ஏசாவின் ஆசீர்வாத்தைப் பெற்றுக் கொள்ள தாய் உதவி செய்கிறாள். யாக்கோபு போய் எல்லா ஆசீர்வாதத்தையும் வாங்கிக் கொண்டான். ஏசா வந்த போது தகப்பன் சொல்கிறான், நான் ஏற்கெனவே எல்லா ஆசீர்வாதத்தையும் கொடுத்து விட்டேனே என்றார். எனக்கு ஒரு ஆசீர்வாதமும் இல்லையா என்பதாக ஏசா அழுகிறான். ஏனென்றால் இவன் ஆசீர்வாதத்தை அசட்டை செய்தவன். ஆனால் யாக் கோபுக்குள் தேவன் கொடுக்கிற ஆசீர்வாதத்தையும், தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை இருந்தது. ஆகையால் யாக்கோபு என்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று போராடி ஜெபித்த போது, கர்த்தர் அவனை அங்கே ஆசீர்வதித்தார்.

கர்த்தர் அவனுடைய பெயரை மாற்றி விட்டார். அந்த இரவு முழுவதும் ஜெபித்த ஜெபத்தில் அவன் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதம் இன்றைக்கு வரைக்கும் அவனுடைய



பெயரில் தான் இஸ்ரவேல் தேசம் இருக்கிறது. உலகத்திலேயே இந்த மாதிரி ஒரு தேசத்தை எங்கேயுமே பார்க்க முடியாது. இஸ்ரவேல் தேசம் தான் உலகத்திலே சிறந்த தேசமாக இருக்கிறது. உலகத்தில் முக்கியமானதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் எல்லாரும் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்த யூதர்கள். இன்றைக்கு அந்த தேசம் உயர்ந்த நிலைமையில் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாக இருக்கிறது. யாக்கோபு என்றால் யத்தன் என்று அர்த்தம். இஸ்ரவேல் என்றால் தேவனுடைய பிரபு என்று அர்த்தம். ஏமாற்றுக்காரனாய் இருந்த யாக்கோபை ஆண்டவருடைய பிரபுவாக தேவன் ஆசீர்வதித்து உயர்த்தினார் என்பதாக பார்க்கிறோம்

**அன்பான வாலிபர்களே! நீங்களும் யாக்கோபைப் போல தேவன் கொடுக்கும் ஆசீர்வாதத்திற்காக வாஞ்சிக்க வேண்டும். அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள ஏக்கத்தோடு தேட வேண்டும். அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். ஆண்டவரைப் பிடித்துக் கொண்டு என்னை ஆசீர்வதித்தால் ஒழிய போகவிடேன் என்று விடாமல் பிடித்துக் கொண்டால் அவரால் உங்களை ஆசீர்வதிக்காமல் போகவே முடியாது. கர்த்தர் யாக்கோபோடு பேசி அவனை ஆசீர்வதித்தது போல உங்களோடும் பேசுவார். உங்கள் ஜெபத்திற்கும் பதில் தருவார் ■**



புதிர்: ரேச்சல்

# வேதாகம

புதையல் வேட்டை

கீழே வேத வசனங்களுக்கு ஒத்த பழமொழிகள் சில கொடுக்கப்பட்டுள்ளது. பழமொழிகளுக்கு ஏற்ற வேத வசனங்களைக் கண்டறிந்து சரியான விடையை எழுதி அனுப்பவும்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்.
3. திருடிய பழம் தித்திக்கும்.
4. நெருப்பில்லாமல் புகையுமா?
5. பட்டயத்தை எடுப்பவன் பட்டயத்தால் சாவான்.
6. கேடு வரும் பின்னே, மதிகேடு வரும் முன்னே.
7. கெடுதல் செய்கிறவனுக்குக் கெட்டதே நடக்கும்.
8. அறிவு பெருத்தோன், அல்லல் பெருத்தோன்.
9. சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
10. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

## கடந்த மாத விடைகள்

1. திஸ்பியா (1 இராஜா. 17:1)
2. கிபியா (ஏசாயா 10:29)
3. ஆனதோத் (எரே. 29:27)
4. தெக்கோவா (ஆமோஸ் 1:1)
5. மொரேசா (மீகா 1:1)
6. எல்கோஸ் (நாகூம் 1:1)
7. சீரியா (லூக்கா 4:27)
8. எரிகோ (லூக்கா 19:1, 2)
9. பெத்சாயிதா (யோவான் 1:44)
10. பெத்தானியா (யோவான் 11:1)
11. கானா (யோவான் 21:2)
12. செசரியா (அப். 10:1)




வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்

பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்

**15.07.2022**

JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org



# ஒளியுள்ள வாழ்க்கை!

சாதனை: சுமா

வெற்றிக் கனியை சுவைத்துப்பார்க்க ஒவ்வொரு நாளும் தயாராகிக் கொண்டிருக்கும் அனைத்து இளம் சாதனையாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். இந்த உலகத்தில் மனிதர்களாக பிறந்த அனைவருக்கும் திறமை, ஞானம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி போன்ற அனைத்து பண்புகளும் இருக்கும். ஆனால் நாம் இவையெல்லாவற்றையும் சரியான நேரத்தில், சரியாக பயன்படுத்துகிறோமா? என்பது தான் முக்கியம். சரியாக பயன்படுத்தின அனைவரும் நமக்கு முன்மாதிரிகளாக உள்ளார்கள். நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஞானம், திறமை, விவேகம் இவற்றை சரியாக பயன்படுத்தவில்லையா? கவலையை விடுங்க... இனி ஒவ்வொரு நாளும் சரியாக பயன்படுத்தி வெற்றிக் கனியை தொட்டு விடலாம். உங்களை இன்னும் தயார்படுத்த ஒரு சாதனையாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்!!!



கியூமத் ராய் குப்தா 1937ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில், மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை சிறிய தொழில் செய்து வந்தார். தன்னுடைய மகனை நன்றாகப் படிக்க வைத்து அரசாங்க வேலையில் அமர்த்தி மாதத்தின் முதல் தேதியில் சம்பளம் வாங்க வைக்க வேண்டும் என்பதே கியூமத் ராய்யின் தந்தையின் மிகப் பெரிய கனவு. ஆனால் கியூமத் ராய்க்கு தான் ஒரு மிகப் பெரிய தொழிலதிபராக வேண்டும் என்பதே அவரது கனவு. தன்னுடைய கனவு ஒரு பக்கம் இருந்தாலும், தந்தையின் கனவை நிறைவேற்ற நன்றாகப் படித்து ஆசிரியர் பணியில் இணைந்தார். தந்தையின் கனவு நிறைவேறிவிட்டது. ஆனால் கியூமத் ராய்க்கு பெரிய தொழிலதிபராக வேண்டும் என்பதால் அவருக்குள் மிகப் பெரிய குழப்பம் இருந்தது. வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் என்ன மாதிரியான தொழில் செய்யலாம், மார்க்கெட்டில் என்ன பொருட்களுக்கு அதிக தேவை இருக்கிறது என்று ஒவ்வொரு நாளும் தேடிக் கொண்டிருந்தார்.

நீண்ட நாள் தேடல் ஒருநாள் முடிவுக்கு வருகின்றது. மார்க்கெட்டில் மின்னணு பொருட்கள் அதிகம் விற்பனை ஆகின்றதை பார்த்த குப்தா, நாம் ஏன் மின்னணுப் பொருட்கள் விற்க கூடாது? என்று முடிவு செய்தார். நாளாக நாளாக ஆசிரியர் பணியும் இவருக்கு சந்தோஷத்தை தரவில்லை. எனவே உடனடியாக ஆசிரியர் பணியை கைவிட்டார். தனது 21வது வயதில் தனக்கு தெரிந்த நண்பர்களிடம் 10,000 ரூபாயைக் கேட்டு வாங்கிக் கொண்டு டெல்லிக்குச் சென்று எலக்ட்ரோ கடையைத் தொடங்கினார்.

குப்தா எதிர்பார்த்தபடியே இவருடைய கடையில் நல்ல வியாபாரம் ஆனது. என்னதான் வியாபாரம் ஆனாலும் குப்தாவால் மேலும் வளர முடியவில்லை. எனவே டெல்லியில் உள்ள முக்கியமான இடத்தில் இரண்டு கடையை ஆரம்பித்து, இரண்டு கடையும் நன்றாக வருமானம் தந்தது. இந்த வருமானம் மட்டும் போதாது இன்னும் வளர வேண்டும் என்று நினைத்த குப்தா மாநிலம் முழுவதும் மின்னணுப் பொருட்களை விநியோகம் செய்ய முடிவு செய்து குஜராத் முழுவதும் அதை செயல்படுத்தவும் தொடங்கினார். இதுமட்டுமல்லாமல், டெல்லியில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகளுக்கு இவரே சென்று ஆர்டர் எடுக்க ஆரம்பித்தார். ஆனால் பொருட்கள் உற்பத்தியாளர்கள் தான் இதில் அதிக இலாபம் கண்டனர். குப்தா உற்பத்தியாளர்களிடம் சென்று என்னுடைய இலாபத்தை ஏற்றுக் கொடுங்கள் என்று கேட்டார். ஆனால் உற்பத்தியாளர்கள் உன்னால் எங்களுடைய பொருட்கள் விற்பனை ஆகவில்லை. எங்கள் பிராண்ட் தான் உனக்கு இலாபத்தை கொடுத்து உள்ளது என்று ஏளனமாக பேசினார்கள். அப்பொழுதுதான்





குப்தா என்னதான் பொருட்களை விற்றாலும் நாம் வளரவே முடியாது என்பதை உணர்ந்தார். நல்ல பிராண்ட்டை உருவாக்கி உற்பத்தியை நாமே தொடங்கலாம் என்று முடிவு எடுத்தார்.

சந்தையில் அநேக பிராண்ட் உள்ளது. இதில் நீயும் ஒரு பிராண்ட்டைத் தொடங்கினால் உன்னால் முன்னேற முடியாது என்று குப்தாவின் நண்பர்கள் இவருக்கு ஆலோசனை சொன்னார்கள். இந்த நேரத்தில் குப்தா மனம் தளராமல் அடுத்ததாக என்ன செய்யலாம் என்று யோசிக்கத் தொடங்கினார். இந்த சமயத்தில் ஒரு பிராண்ட்டைக் கண்டுபிடித்தார். இந்த பிராண்ட் அநேக வருடம் சந்தையில் இலாபத்தைப் பார்க்காமல் நஷ்டத்தையேப் பார்த்துக் கொண்டு இருந்தது. இதையறிந்த குப்தா அந்தப் பிராண்ட்டை வாங்க முன்வந்தார். அந்த பிராண்ட்டின் பெயர் Havells. Havells Brand-ன் தரத்தை முதலில் உயர்த்த திட்டமிட்ட குப்தா அநேக நிறுவனத்தில் உள்ள தொழில் நிபுணர்களை தன்னுடைய நிறுவனத்தில் இணைத்தார். பின் எந்தப் பொருட்களை உற்பத்திச் செய்வது என்று முடிவு எடுத்தார். இவருடைய தெளிவான முடிவால் இரண்டே வருடத்தில் Havells நிறுவனம் வெற்றிப் பாதையில் செல்ல ஆரம்பித்தது.

**தோல்வியையெல்லாம் கண்டு சோர்ந்து போகாமல் அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினார்.**

நன்றாக நிறுவனம் சென்றுக் கொண்டிருந்த நிலையில் மிகப் பெரிய போராட்டத்தைச் சந்திக்க நேரிட்டது. இவருடைய நிறுவனம் பொருட்களை விலைக்கு விற்றதால் இவருக்கு போட்டியாக உள்ள நிறுவனம் அனைத்தும் ஒன்றுக் கூடி Havells நிறுவனத்தின் பொருட்களின் தரம் மிகக் குறைவு என்று பொய்யாக இந்த நிறுவனத்தின் மேல் குற்றம் சுமத்தத் தொடங்கினார்கள். இதனால் அநேக நிறுவனங்கள் Havells நிறுவனத்தின் பொருட்களை வாங்குவதை தவிர்த்தனர். மறுபடியும் Havells நிறுவனம் நஷ்டத்தை சந்திக்கத் தொடங்கியது. இந்தத் தோல்வியையெல்லாம் கண்டு சோர்ந்து போகாமல் அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினார். சந்தையில் உள்ள எலக்ட்ரிக் பொருட்களை விட, நாமாகவே எலக்ட்ரிக் பொருட்களை உருவாக்கலாம் என்று எண்ணிய குப்தா Research and Development Team-யை உருவாக்கினார். அடுத்ததாக தொழிற்சாலைகளில் எந்த எலக்ட்ரிக் பொருள் சீக்கிரம் பழுதாகிறது என்று கணக்கெடுக்க ஆரம்பித்தார். சுவிட்ச் தான் அடிக்கடி பழுதாகிறது என்ற கண்டறிந்து, அடிக்கடி பழுதாகாத சுவிட்சை மாற்றவும் கண்டுபிடித்தனர்.



இந்த சுவிட்ச்களுக்கு தொழில் துறையில் அதிகபடியான வரவேற்பு கிடைத்தது. எந்த கம்பெனி எல்லாம் Havells தரம் குறைவற்றது என்று அந்த பொருளை வாங்க மறுத்தார்களோ இப்பொழுது போட்டி போட்டு வாங்க முன்வந்தனர். இதைப் போன்று பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தனர். இதில் முக்கிய Product உயர் மின்னழுத்தங்களைத் தாங்கக்கூடிய Puse, மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு என்னென்ன Electric Product தேவை என்று அறிந்த அதை தயாரிக்க ஆரம்பித்தார். Havells நிறுவனம் பெரும் வளர்ச்சியைக் கண்டது. இது மட்டும் போதும் என்று நிறுத்தாமல் சின்ன சின்ன நிறுவனங்களை வாங்கத் தொடங்கினார். பின்னர் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களை வாங்கத் தொடங்கினார். எலக்ட்ரிக் பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்த நிறுவனம் வீட்டு உபயோகப் பொருட்களையும் விற்பனைச் செய்யத் தொடங்கியது. 10,000 முதலீட்டைக் கொண்டு தொடங்கப்பட்ட Havells நிறுவனத்தின் தற்போதைய மதிப்பு 9500 கோடி ஆகும். தலைசிறந்த நிறுவனமாக Havells உள்ளது. உங்கள் வீடுகளிலும் உள்ள பெரும்பாலான பொருட்கள் Havells Companyயை சார்ந்தது.

**தன்னம்பிக்கை விடாமுயற்சி எதையும் சாதித்து விடலாம் என்ற ஆற்றல் யாருக்கு இருக்கிறதோ, அவர்கள் ஒவ்வொரு நாளும் வெற்றியை ருசித்துப் பார்க்கலாம். தோல்வி வரும் போது சோர்ந்து விடாமல், அடுத்து என்ன செய்து தோல்வியை தோற்கடிக்கலாம் என்று சிந்தித்து செயல்பட்டால் நிச்சயம் வெற்றி. உங்கள் முன்னால் உள்ள தோல்வியைக் கண்டு ஓட போகிறீர்களா, இல்லையென்றால் தோல்வியை உங்கள் முன்னால் மண்டியிட வைக்க போகிறீர்களா? விடை உங்களிடமே!!!** ■



# மனப்பூர்வமாய் மன்னித்தவர்கள்...

சிந்தனை சிதறல் ரெபேக்கா

## யோசேப்பு - தன் சகோதரர்களை...



யாக்கோபுக்கு 12 குமாரர்களில் யோசேப்பு 11வது குமாரன். யாக்கோபு மற்றக் குமாரர்களைக் காட்டிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்தார். அவனுக்கு பலவருண அங்கியைக் கொடுத்தார். இதனால் யோசேப்பின் மற்ற சகோதரர்களுக்கு இவன் மேல் எரிச்சல் உண்டானது. யோசேப்பு பல சொப்பனங்களை பார்த்ததாக சொன்னபோது இன்னும் அதிகமாய் அவனைப் பகைத்தார்கள். யோசேப்பைக் கொலை செய்ய திட்டம்போட்டு, அவனை குழியில் போட்டார்கள். அந்த வழியாக வந்த இஸ்மவேலரிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள். எகிப்துக்கு கொண்டு போகப்பட்ட யோசேப்பு அங்கும் பலவிதமான இன்னல்களை அனுபவித்தான். கர்த்தர் யோசேப்போடு இருந்தபடியினால், பார்வோன் யோசேப்பை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக்கினான். தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியினால் சகல தேசத்தாரும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி வந்தார்கள். யோசேப்பின் சகோதரர்களும் தானியம் கொள்ளும்படியாக வந்தார்கள். அவர்கள் யோசேப்பை அறியவில்லை. ஆனால் யோசேப்பு அவர்களை அடையாளம் கண்டுகொண்டான். தனக்கு தீங்கு செய்தவர்களை மன்னித்து அவர்களை உபசரித்து, தன் சகோதரர்களுக்கு தன்னை அறிமுகப்படுத்தினான். அவர்களை கட்டி அணைத்து முத்தம் செய்தான். யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தீமை செய்யாமல் அவர்கள் செய்த தவறை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்தான் (ஆதி.37-45 அதிகாரங்கள்).

**அன்பான வாலிபர்களே! நம் உறவினர், உடன் பிறந்தவர்கள் நமக்கு தீங்கு செய்திருந்தாலும், யோசேப்பைப் போல மன்னிக்கும் போது உங்களைக் கொண்டும் மேன்மையான காரியங்களை செய்வார்.**

## தகப்பன் தன் இளையகுமாரனை...

ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். இளையவன் தகப்பனிடத்தில, சொத்தில் என் பங்கை பிரித்துத் தரவேண்டும் என்றான். எனவே தகப்பன் அவர்களுக்குத் தன் சொத்தை பங்கிட்டுக் கொடுத்தார். சில நாட்களுக்குப் பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரநாட்டுக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் வாழ்ந்து, தன் சொத்தை எல்லாம் அழித்துப்போட்டான். எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் நாட்டில் கொடிய முண்டானபோது, அந்த நாட்டின் குடிகளில் ஒருவனிடத்தில் போய் சேர்ந்துக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். பன்றிகள் தின்னும் தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்பினான். என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் போதுமான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன் என்று அவன் புத்தி தெளிந்தவனாய் தன் தகப்பனிடத்தில் வந்தான். இளைய மகன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தார். தன் ஊழியக்காரரிடம் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள் என்று தன் மகன் செய்த தப்பிதங்களை மன்னித்து அவனை ஏற்றுக் கொண்டார் (லூக்கா 12: 11-22)



**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு உங்களுடைய நண்பர்கள் ஏதோ தவறு செய்து விட்டார்கள் என்பதற்காக அவர்களை மன்னிக்காமல் இருப்பீர்களென்றால் இன்றைக்கே மன்னித்து விடுங்கள். மகன் எல்லாவற்றையும் இழந்து வந்தபோதும் அவற்றை மன்னித்து ஏற்றுக்கொண்டது போல நீங்களும் மன்னித்து ஏற்றுக்கொள்ள ஆயத்தமா?**

## ஸ்தேவான் - தன் மேல் கல்லெறிந்தவர்களை...



பந்தி விசாரிப்பின் பணிக்காக தேவனால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஸ்தேவான். விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ததினால், சிலர் மிகவும் எரிச்சலடைந்தார்கள். அவர்களில் சிலர் எழும்பி, ஸ்தேவானுடன் தர்க்கம் பண்ணினார்கள். ஆனால், அவர் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று. அவர்மேல் குற்றம் பிடிக்க வகை தேடி, மோசேக்கும் தேவனுக்கும் விரோ தமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல் லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி, ஜனங்களையும் யூத மதத்தின் மூப்பரையும் அவர்களின் வேத வல்லுனர்களையும் எழுப்பிவிட்டு; அவன் மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய்;, இந்த மனிதன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்; என்று பொய்சாட்சிகளை ஏற்படுத்தினார்கள். ஸ்தேவான் ஜனங்களுக்கு நற்காரியங்களை எடுத்துக் கூறினார், ஆனால் ஜனங்களோ அவருக்கு தீமை செய்ய ஆர்வமாய் இருந்தார்கள். அவர் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டு, மூர்க்கமடைந்து, நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவரைக் கல்லெறிந்தார்கள். அந்த நிலையிலும் அவர்களின் மேல் தேவன் கோபம் கொள்ளாமல் இருக்கும்படி வேண்டுதல் ஜெபத்தையும் மன்னிப்பை கொடுக்கும்படி வேண்டுவதையும் பார்க்கிறோம் (அப். 7)

**அன்பான வாலிபர்களே! ஸ்தேவானைக் கல்லெறிந்து இரத்தசாட்சியாக மரிப்பதற்கு, காரணமாய் இருந்தவர்களைக் கூட மன்னிப்பைக் கொடுக்கும்படி வேண்டினார். நீங்கள் எப்படி?**

## தாவீது - தன்னை கொலை செய்ய நினைத்த சவுலை...

தாவீது கோலியாத்தைக் கொன்ற பிறகு, சவுல் ராஜா தன்னுடைய படைக்கு தாவீதைத் தலைவராக்கினார். தாவீது நிறைய போர்களில் ஜெயித்தார், அதனால் எல்லாருக்கும் அவரை ரொம்பப் பிடித்துவிட்டது. அவர் போரில் ஜெயித்துவிட்டு திரும்பி வந்தபோதெல்லாம், 'சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பல ஆயிரம்' என்று சொல்லி பெண்கள் ஆடிப்பாடினார்கள். அதனால், தாவீதுமேல் சவுல் பொறாமைப்பட்டார், அவரைக் கொல்ல நினைத்தார். சவுல் தாவீதை விடாமல் துரத்தினான். தாவீதும் எத்தனையோ தடவைகள் தன் பிராணனைக் கையில் பிடித்தவராக இடத்தை மாற்றி மாற்றி ஓடினார். பித்துப்பிடித்தவன்போல வேஷம் வேறு போட்டுத் தப்ப வேண்டிய சந்தர்ப்பங்களும் வந்தது. சவுலினால் இத்தனை பாடுகளை அனுபவித்தும், தன் கையில் சவுல் கிடைத்தபோது, சவுலைத் தொடவில்லை. தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் மேல் கையைப் போடமாட்டேன் என்று சொல்லி, தன் கையில் சிக்கிக்கொண்ட சவுலின் சால்வைத் தொங்கலைமட்டும் அறுத்துக்கொண்டு, தாவீது சவுலை மன்னித்து அனுப்புகிறார். (1சாமுவேல் 24:1-22)

**அன்பான வாலிபர்களே! தாவீதை போல மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள். அதுவே உங்களுக்கு மிகுந்த ஆரோக்யமாக இருக்கும். பழிக்கு பழி வாங்க நினைக்காமல் மன்னிக்கிறவர்களாக மாறுவீர்களா?**



எழுப்புதல் செய்தி: சதீஷ்



# எழுப்புதல் அரசியல் துறை

இந்திய தேசத்தில் பஞ்சம், வறுமை, விபச்சாரம், குடிப்பழக்கம், போதை இவை எல்லாம் நீங்கி தேசம் சமாதானத்துடன் இருக்க வேண்டுமானால், கட்டாயம் அரசியல் துறையில் எழுப்புதல் அக்கினி போடப்பட வேண்டும். தேசத்தை ஆளுகை செய்கின்ற பிள்ளைகள் கர்த்தருக்குப் பரியமானவர்களாக இருக்கும் போது, அந்த தேசமே ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாக மாறி விடும் என்பதில் சந்தேகம் இல்லை. அரசியலில் எழுப்புதலை வரும் போது பதவி ஆசைகள், சுயநலம், போட்டி பொறாமைகள், லஞ்சம் இவை எல்லாம் முற்றிலும் அழிக்கப்பட்டு ஆசீர்வாதமான தேசமகா உருவாகும்.

யோசபாத் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானவற்றை செய்தபடியால் கர்த்தர் அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார். கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டது. இதன் விளைவு என்னாச்சு தெரியுமா? அவன் யூதா பட்டணங்கள் எங்கும் உபதேசம் பண்ணும்படிக்கு ஆசாரியர்களையும், லேவியரையும் அனுப்பினான். ஆசாரியர்கள் ''...கர்த்தருடைய வேதபுஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்'' (2 நாளா. 17:9). இதன் மூலம் தேசம் சுத்திகரிக்கப்பட்டு யூதா எங்கும் கர்த்தருடைய ஆளுகைஉண்டாகி, ஜனங்கள் மிகுந்த சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ ஆரம்பித்தார்கள். தேசம் அமரிக்கையாக இருந்தது. அரசியல் துறையில் எழுப்புதல் அக்கினி போடப்பட வேண்டும் என்று நீங்கள் ஜெபிக்க ஆரம்பித்தால் யோசபாத் போன்ற தலைவர்களை தேவன் ஏற்படுத்தி தேசத்தை சுத்திகரிப்பார்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் சிறு வயது முதல் தேவனுக்கு பிரியமான மகனாகவும், வேதத்தை நேசிக்கிற வாலிபனாகவும் இருந்தார். அரசியலில் ஈடுபடுவதன் மூலம் தேசத்தின் அடிமைத் தனத்தை ஒழிக்க முடியும் என்று யோசித்து 1834ஆம் ஆண்டு தனது 25வது வயதில் முதன்முதலாக மாநில சட்டமன்றப் பதவிக்கு போட்டி யிட்டு வெற்றி பெற்றார். ஜனங்கள் விரும்பிய நல்ல மக்களாட்சியை அவர் கொடுத்ததால், 1860ஆம் ஆண்டு அமெரிக்கா அரசியலில் யாரும் எதிர்பாராத விதமாக 16வது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1862ஆம் ஆண்டு அமெரிக்காவில் யாரும் கொத்தடிமைகளாக இருக்கக் கூடாது என்று பிரகடனம் செய்தார். இது அமெரிக்கா அரசியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அடிமையாக இருந்த அநேகர் விடுதலை செய்யப்பட்டனர். தேசம் எங்கும் ஒரு நல்லாட்சி அமைந்தது.






எனக்கன்பான வாலிபர்களே, ''நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே (ஜெபம்) செய்ய வேண்டும்'' (1 தீமோ. 2:2). நீங்கள் ஒவ்வொருநாளும் ஜெபம் பண்ணும் போது கர்த்தர் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருவார். அரசியலில் எழுப்புதல் வந்தால் சமுதாயத்தில் மாற்றம் கட்டாயம் வரும், தேசத்தின் அடிமைத்தனம் மாறும்.

**நம் தேசத்தில் இருக்கும் தேசிய கட்சிகள் - 08**
**மாநில கட்சிகள் - 05**
**பதிவு செய்யப்பட்ட கட்சிகள் - 598**

## ஆந்திரா மாநிலம் புத்தூரில் ...

# சாதனையாளர்கள் 2022







ஆந்திரா மாநிலம் புத்தூரில் கடந்த ஜூன் மாதம் 11ஆம் தேதி சாதனையாளர்கள் 2022 என்கிற தலைப்பில் வாலிபர்களுக்கென்று சிறப்பு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டனர். அநேக வாலிபர்கள் தங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு இயேசுவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும், வல்லமையினாலும் நிரப்பப்பட்டார்கள். இதில் சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டு வாலிபர்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள்.











ஜெபம்: எஸ்தர்

# ஜெபக்கையேடு

## ஜூலை 2022




1 நம் தேசத்தில் பாலியல் தொழில் செய்ய அரசு வழங்கப்பட்டுள்ள அனுமதி தடை செய்யப்பட ஜெபிப்போம்.

2 விபச்சார வெப்சைட்டுகள் தடை செய்யப்பட ஜெபிப்போம்.

3 கள்ளத்தொடர்பு என்கிற பெயரில் பிசாசு அநேக குடும்பங்களை சீரழித்துக் கொண்டிருக்கிறான். இதனால் குழந்தைகள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

4 பாலியல் தொழிலும் ஒரு தொழில் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. சமுதாயத்தை சீரழிக்கும் பிசாசின் தந்திரங்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

5 பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் பெண்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

6 ஆன்லைன் ரம்மி விளையாட்டினால் பணத்தை இழந்து கடன் தொல்லையினால் தற்கொலைகள் செய்பவர்கள் அதிகரித்து வருகிறது. ஆன்லைன் ரம்மி விளையாட்டு தடை செய்யப்பட ஜெபிப்போம்.

7 ஆன்லைன் ரம்மி விளையாட்டிற்கான வெப்சைட்டுகள் தடை செய்ய அரசு சட்டம் கொண்டு வரை ஜெபிப்போம்.

8 ஆன்லைன் ரம்பி விளையாட்டிற்கு அடிமைப்பட்டு அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கும் ஒவ்வொருவரும் மீட்கப்பட ஜெபிப்போம்.

9 பண ஆசை காட்டி ஏமாற்றப்பட்டு நிற்கும் ஒவ்வொருவரும் இது தவறான செயல் என்பதை உணர்ந்து இதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

10 போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கப் பட்டிருக்கும் மக்கள் விடுதலையாக்கப்படவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

11 தேசம் முழுவதும் நடைபெறும் போதைப்பொருள் கடத்தல்கள், தடுக்கப்படவும், கடத்துபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவும் ஜெபிப்போம்.

12 போதைப் பழக்கத்தை தூண்டுகிற பொல்லாத ஆவியின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

13 கஞ்சாவிற்கு அடிமைப்பட்டிருக்கும் சுமார் 3.1 கோடி பேரின் குடும்பங்களை கர்த்தரின் ஆளுகைக்குள் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

14 போதை மாத்திரைக்கு அடிமைப் பட்டிருக்கும் 2.3 கோடி பேரையும் கர்த்தர் சந்திக்கும்படியும், இப்பழக்கத்திலிருந்து வெளிவரவும் ஜெபிப்போம்.

15 இந்தியாவில் உள்ள 5334 அணைகளும் தூர்வாரப்பட்டு, சரியான முறையில் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.





**16** இந்தியாவில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் மாசடையாமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**17** அணைகளில் தேவையான தண்ணீர் தேக்கப்பட்டு பாதுகாத்து, தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

**18** தேசத்தில் பரவி வரும் கொள்ளை நோய்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**19** குரங்கம்மை நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் சுகம் பெற ஜெபிப்போம்.

**20** நம் தேசத்தில் கொள்ளை நோயைக் கொண்டு வந்து எழுப்புதலை தடை செய்கிற பொல்லாத ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

**21** குரங்கம்மை நோய்க்கான சிகிச்சைகள் அழிக்கப்பட அரசாங்கம் தகுந்த ஏற்பாடு செய்ய ஜெபிப்போம்.

**22** எந்த தொற்றும் யாரையும் தாக்காதபடி சுகாதாரத்துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்க ஜெபிப்போம்.

**23** கடந்த 10 ஆண்டுகிளல் (2011-2020) 320 விமான விபத்துகள் நடந்ததில் 1752 பேர் உயிரிழந்துள்ளனர். இனி இந்த விமான விபத்துகள் நடைபெறாதபடி தடுக்கப்பட ஜெபிப்போம்.

**24** விமானங்களை ஓட்டும் விமான ஓட்டுநர்களுக்கு நல்ல ஞானமும், விவேகமும் உண்டாகவும், பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

**25** இயற்கை சீற்றங்களினால் வரும் விபத்துகள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

**26** விமானங்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு உபயோகிக்கப்பட ஜெபிப்போம்.

**27** திருச்சபைகள் மற்றும் சபை போதகர்களுக்கு விரோதமாக எழும்பும் தீவிரவாதத்தின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.



**28** சபைகளுக்குள் இருக்கும் பிரிவினையின் ஆவிகள் கட்டப்படவும், சபைகள் மீது ஜெப ஆவி ஊற்றப்படவும் ஜெபிப்போம்.

**29** கள்ளப்போதனைகள், கள்ள ஆராதனைகள் சபைகளுக்குள் வராதபடி தடுக்கப்படவும், சபை விசுவாசிகள், ஊழியர்கள் எச்சரிக்கையாக இருக்க ஜெபிப்போம்.

**30** தேசம் முழுவதும் இருக்கிற திருச்சபைகளும் சுவிசேஷத்தை தீவிரமாய் அறிவிக்கவும், சீஷர்களை உருவாக்குகிற சபைகளாக மாறவும் ஜெபிப்போம்.

**31** எல்லா திருச்சபைகளிலும் ஆவியானவர் ஊற்றப்பட, ஆவியானவரின் வழிநடத்துதல் உண்டாக ஜெபிப்போம்.

**தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!**



Petra
பேதுருவோடு ஒரு பயணம்...
பகுதி 6

ஊழிய பயணம்: வயலா

# வெறுமையான கல்லறையில் பேதுரு

வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். உடனே அவள் ஓடி, மற்ற சீஷர்களை தேடிச் செல்லாமல் முதலாவது பேதுருவினிடத்திலும், யோவானிடத்திலும் அறிவிக்கிறாள். தேவதூதனும் கூட 'இயேசு உயிர்த்தெழுந்தார்' என்று அறிவித்த பின், அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் அறிவியுங்கள் என்று இயேசுவின் கல்லறைக்கு சுகந்த வர்க்கமிடும்படி வந்த பெண்களிடம் அறிவிக்கிறார் (மாற்கு 16:7). இதன் மூலம் பேதுரு, சீஷர்களில் விசேஷித்தவர், பிரதானமானவர் என்பதை அக்காலத்தில் வசித்தவர்களும், தேவ தூதர்களும் அறிந்திருந்தார்கள் என்பதை உணர்ந்துக் கொள்ளலாம். பேதுருவும் யோவானும் ஒருமிக்க கல்லறைக்கு ஓடினாலும், பேதுருவை பார்க்கிலும் யோவான் துரிதமாய் ஓடி கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். ஆனால் உள்ளே பிரவேசிக்கவில்லை. பேதுரு பிந்தி ஓடி வந்தாலும் நிதானமாக கல்லறைக்குள் சென்று கூர்மையாக கவனிக்கிறவராய் இருந்தார். அந்த வெறுமையான கல்லறையில் பேதுருவின் மனது நிதானமாக ஆராய்ச்சி செய்கிறது. சடலத்தை யாராவது தூக்கிச் சென்றிருந்தால், சீலைகளை கழற்றி கல்லறையிலே வைத்திருக்க மாட்டார்கள். தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடன் இராமல் தனியே சுருட்டி நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த சம்பவம் அவசர அவசரமாய் நடைபெறாமல் நிதானமாக நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை உணர்ந்திருப்பார். ஆனாலும் அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை சீஷர்கள் அறியாதிருந்தார்கள் (யோவான் 20:9). பிரதான ஆசாரியருக்கும் பரிசேயருக்கும் இயேசு மூன்று நாளைக்கு பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது ஞாபகத்தில் இருந்தது (மத். 28:63). எனவே அவர்கள் கல்லறையை தங்களால் இயன்ற மட்டும் பத்திரப்படுத்தினார்கள். ஆனால் சீஷர்கள் மறந்து போனது நமக்கு வியப்பை அளிக்கிறது. இருப்பினும் இயேசு தனது சீடர்களில் முதலாவதாக பேதுருவுக்கே தரிசனமானார் (லூக்கா 24:34; 1 கொரி. 15:5) என்பது குறிப்பிடத்தக்கது.



## பின்மாற்றமும், மனமாற்றமும்

இயேசுவுடனே சில வருடங்கள் வாழ்ந்து இருந்தாலும், அவர் செய்த அற்புதங்கள் பலவற்றை கண்ணால் பார்த்து இருந்தாலும், மீன் பிடித் தொழிலிருந்து மனிதரைப் பிடிக்கும் உயர்வானத் தொழிலுக்கென்று இயேசுவால் அழைக்கப்பட்டு இருந்தாலும், இயேசுவுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், நேரிட்ட சிலுவை பாடுகள், பேதுருவை சற்று கலங்கவும், குழம்பவும் செய்திருந்தது. பேசாமல் பழைய மீன் பிடித்தொழிலுக்கே சென்று விடலாம் என்று எண்ணி விட்டார். சில சீடர்களையும் நாத்தான் வேலையும் அழைத்துக் கொண்டு திபேரியா கடலுக்கு சென்று வலையை வீசினால், இரவெல்லாம் உழைத்தும் பயன் இல்லை. விடியற்காலமான போது, உயிர்த்த கிறிஸ்து கடற்கரையில், அவரது கட்டளைப்படி வலதுபுறம் வலை போட்ட போது வலை நிறைய மீன்கள். அற்புதத்தைக் கண்டவுடன் தான் அவர் கர்த்தர் என்று சீஷர்கள் உணர்ந்தனர். அவர் கர்த்தர் என்று. பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டா என்ற கேள்விக்கு இல்லையென்று பதிலளித்தவர்களுக்கு



கரையில் வந்து பார்த்த போது நெகிழ்ச்சி. ஆம், கரி நெருப்பில் மீன், பக்கத்தில் அப்பம். மேலும் இப்பொழுது பிடித்தவற்றில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் என்று அன்பு கட்டளை கொடுத்தார். களைத்து வந்தவர்களிடம் முதலில் அப்பத்தையும், மீனையும் கொடுத்து பசியாற்றிய கிறிஸ்துவின் அன்பு வியக்கத் தகுந்தது. பின்மாற்றத்தினால், இரவு முழுவதும் கண்ட தோல்விக்கும் கடின உழைப்புக்கும் இயேசு வந்த பின் தான் விடை கிடைத்தது.

153 பெரிய மீன்கள் வடிவில் மாபெரும் வெற்றி. இத்தனை திரளான மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு வருமுன் வாழ்ந்த வாழ்வையே தேடிச் சென்ற பேதுருவைத் தேடி வந்தது இயேசுவின் அன்பும், அற்புதமும், ஆறுதலும். இதனை உணர்ந்து அனுபவித்த பேதுரு சில ஆண்டுகள் கழித்தே தன் நிருபத்தில் எழுதினார், ''அன்பு திரளான பாவங்களை மூடும்'' என்று மற்ற சீஷர்களைக் காட்டிலும் பேதுரு தன்னிடம் அதிக அன்பு கூற வேண்டும் என்றே இயேசு விரும்பினார். எனவே தான் 3 முறையும் தகப்பன் பெயரோடு குறிப்பிட்டு யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பு கூறுகிறாயா என்று கேட்கிறார். ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று பேதுரு மறுமொழி கூறுகிறார். என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று பேதுருவின் ஊழிய அழைப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். கர்த்தர் மூன்று முறை மறுதலித்த பேதுருவை, மூன்று முறை 'உம்மை நேசிக்கிறேன்' என்று மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும் என்ற வசனத்தின் அடிப்படையில் கூற வைத்தார் கர்த்தர். கிரேக்க மொழியில் 'அன்பு'க்கு இரண்டு வார்த்தைகள் உண்டு. அகப்பே (Agape) - உண்மையான ஆழ்ந்த அன்பு.



பிலியோ (Phileo) - நேசம் / நண்பனாக கருதும் அன்பு. கர்த்தர் ஒருமுறை பிலியோ என்ற கிரேக்க சொல்லையும் இரண்டு முறை அகப்பே என்ற சொல்லை பயன்படுத்திய தாகவும் ஆனால் பேதுருவோ மூன்று முறையும் 'பிலியோ' என்ற சொல்லையே பயன்படுத்தியதாகவும், Agape என்ற சொல்லை பயன்படுத்த தனக்கு தகுதியில்லை என்று கருதியதாக விளக்க வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

## சீஷர்களுள் பேதுருவின் நண்பன்

பன்னிரெண்டு சீஷர்களுள் பேதுருவோடு மிகவும் நெருங்கி இருந்தது யோவானே. பேதுருவுக்கு முதிர்வயதில் சம்பவிக்க போகிறதை கர்த்தர் விளக்கி கூறியவுடன், பேதுரு யோவானைக் குறித்தும் அறிந்து விட விரும்புகிறார். ஆனால் கர்த்தரோ மற்றவர்களைப் பார்க்காமல் நீ என்னை பின் பற்றிவா என்று தெளிவாக கூறி விட்டார். பேதுருவும், யோவானும் இருவரும் மீன்பிடித் தொழில் செய்தவர்கள் இராப்போஜனத்தின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்த போது சைகை மொழியில் பேசிக் கொள்ளும் அளவுக்கு நெருங்கிய புரிந்துக் கொள்ளுதல் உள்ளவர்கள் (யோவான் 13:24). ஜெபவேளையில் தேவாலயத்துக்கு ஒன்றாக செல்பவர்கள் (அப். 3:1). நெருங்கிய நண்பர்களாய் இருந்தாலும் ஒவ்வொருவரையும் குறித்து கர்த்தர் வெவ்வேறு திட்டங்களை வைத்திருக்கிறார் என்று பேதுரு உணர்ந்து கொள்ளுகிறார்.

**இன்னும் பல முக்கிய சம்பவங்களோடு பேதுருவோடு ஒரு பயணம் தொடரும்.**

நிகழ்வு: கெத்சி கிளார்வின்



## வேதாகமத்தில் பறவைகள்

# கொக்கு – நாரை

கொக்கு, நாரை, குருகு என்னும் பறவைகள் தமிழ்நாட்டில் கிராமப்புற வயல்வெளிகளில் வாழ்கின்றன. இவைகள் ஏர் உழும்போது மாடுகள் பின்னாலேயே செல்லும். மாடுகள் காலை எடுத்தவுடன் அந்த இடத்திலிருந்து புழு பூச்சிகள் வெளிப்படும்பொழுது இப்பறவைகள் அவைகளைப் பிடித்துத் தின்னும். இவற்றின் தனித்தன்மை என்னவென்றால், ஒரு ஜோடியில் ஒன்று இறந்துப் போனாலும் இன்னொன்று கத்தி கத்தியே இறந்து போகுமாம். இப்பறவைகளிடம் நாம் கற்றுக்கொள்ளும் காரியங்கள் சிலவற்றை இப்பகுதியில் தொடர்ந்து பார்ப்போம் வாருங்கள்!

## காத்திருப்பு

- கொக்கு தண்ணீர் கரையில் மீன்களுக்காக காத்திருக்கும் முறை வியக்கத்தக்கது. ஏனென்றால் ஒற்றைக்காலில் நின்று ஆடாமல் அசையாமல் நிற்கும் கொக்கு மிக பொறுமையாக காணப்படும். நல்ல கொழுத்த மீன் அதன் காலண்டை வந்தவுடன் அதை கொத்திக் கொள்ளும்.
- ஆனால் மனிதர்களாகிய நமக்கு, நம் ஜெபத்திற்கு உடனடியாக பதில் வரவில்லை என்றால் சோர்ந்து போய்விடுகிறோம்.
- கொக்கு உணவை பெற்றுக்கொள்ள பொறுமையுடன் காத்திருப்பது போல, நாமும் கர்த்தரின் வேளைக்காக ஒவ்வொரு காரியத்திலும் காத்திருப்போமானால் எல்லாவற்றிலும் சிறந்ததையே நாம் நம் வாழ்வில் பெற்றுக் கொள்ள முடியும்.



''ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்'' (எரேமியா 8:7).

## ஆயத்தம்

- கொக்கு முதலிய பறவைகள் தங்களுடைய (MIGRATION) புலம் பெயர்வு அல்லது மண்டல பெயர்வை நன்றாக அறியும்.
- புலம் பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் இடம் நிரந்தரமானதல்ல என்ற அறிவு அவைகளுக்கு இருக்கிறபடியால் ஏற்றவேளை வரும்போது, தாம் தங்கி மகிழ்ந்த வீட்டை விட்டு விட்டு தங்களது சுய பிரதேசத்தை நோக்கி மகிழ்ச்சியோடு பறந்து செல்கின்றன.
- நமக்கும் இந்த உலகம் நிரந்தரமானது அல்ல, நம் சுயதேசம் பரலோகமே என்ற புரிதல் நமக்கு மிக அவசியம். இதை வாசித்துக்கொண்டிருக்கும் வாலிபரே! பரலோகத்தில் தேவனைச் சந்திக்க உன்னுடைய ஆயத்தங்கள் எப்படிப்பட்டதாய் உள்ளது?



பரலோகம் செல்வது குறித்து எண்ணும்போதெல்லாம் அது உன் இருதயத்திற்கு பயத்தை உண்டுப்பண்ணுகிறதா? அல்லது அங்கு நான் மகிழ்ச்சியுடன் செல்வதற்கு எந்நேரமும் ஆயத்தம் என்ற மனநிலையில் உள்ளாயா? சற்று சிந்தியுங்கள்!

''...உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு''
(ஆமோஸ் 4:12).

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

நிகழ்வு: கெத்சி கிளார்வின்

கடந்த மாதத்தில் எவ்வாறு ஒரு மணி நேரம் ஜெபிப்பது அதற்கான ஆயத்தங்கள் என்ன என்பதெல்லாம் நாம் பார்த்தோம். தொடர்ந்து இம்மாதத்தில், சற்று ஆழமாக ஒரு மணி நேரம் எவ்வாறு ஜெபிப்பது என்பதை பார்ப்போம்.

முதல் 15 நிமிடங்கள்: **துதியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்!** அடுத்த 15 நிமிடங்கள்: **வேதத்தை தியானியுங்கள்!** அடுத்த 30 நிமிடங்கள்: **ஜெபியுங்கள்!**

## கர்த்தரை நாம் எவ்வாறு துதிப்பது, ஸ்தோத்தரிப்பது?

**துதிப்பது** – கர்த்தருடைய வல்லமையையும், மகத்துவங்களையும் சொல்லி அவரைப் புகழ்வது.

எ–கா: சர்வ வல்லவரே, உம்மைத் துதிக்கிறேன்! இயேசுவே, என் இரட்சகரே, உம்மைத் துதிக்கிறேன்!
பரிசுத்த ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறேன்!

**ஸ்தோத்தரிப்பது** – கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி சொல்வது.

எ–கா: என்னை இரட்சித்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! எனக்கு கொடுத்திருக்கும் நல்ல சரீர சுகத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம்! எனக்கு கொடுத்திருக்கிற எல்லா நன்மையான ஈவுகளுக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்!



## வேதத்தை எப்படி தியானிப்பது?

- அனுதின தியானப் புத்தகத்தில் உள்ள வேதப்பகுதிகளை தினமும் கிரமமாக வாசித்து தியானிக்கலாம்...
- ஆதியாகமத்திலிருந்து ஒவ்வொரு அதிகாரமாக தியானித்து வரலாம்...
- வேதாகமத்தில், ஒவ்வொரு புத்தகமாகத் தெரிந்தெடுத்து அதனை தியானிக்கலாம்...

எந்த முறையானாலும் சரி, வேதத்தைத் தியானிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். உங்களுக்குப் பிரியமான ஒரு முறையைத் தெரிந்தெடுத்து, அதை ஒழுங்காகக் கடைப்பிடிப்பது நல்லது.

## எப்படி ஜெபிப்பது?

கர்த்தரை துதித்து, வேத வசனங்களை தியானித்து, அர்ப்பணித்த பிறகு, ஜெப நேரத்திற்குள் கடந்து வாருங்கள்.

- முதலாவது, மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்
- தேசத்தில் அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக ஜெபியுங்கள்!
- தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!
- கடைசியில், உங்களுக்காக ஜெபியுங்கள்!

**நீச்சலைக் குறித்து எத்தனை வகுப்புகளில் பங்கு பெற்று நீச்சலடிக்கிற முறைகளை நீங்கள் கற்றுக்கொண்டாலும், நீங்கள் தண்ணீருக்குள் இறங்கி நீச்சலடிக்க முயற்சிக்காவிட்டால், நீச்சல் வீரனாக முடியாது. அன்பு வாலிபர்களே! இவை அனைத்தும் வாசித்து முடித்தால் மாத்திரம் உன்னால் ஒரு மணி நேரம் ஜெபிக்கும் ஜெப வீரராய் மாறிவிட முடியாது. கர்த்தரிடம் பெலனும் கிருபையும் கேட்டு, ஜெபிக்க தீர்மானித்து, அனுதினமும் நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே ஒரு நிலையான ஜெப ஜீவியத்தை நீ தொடர முடியும்.**

**ஜெபித்து பழகுங்கள், உங்கள் வாழ்க்கையே ஜெயமாக மாறும்!**



எழுப்புதலில் வாலிபர்களை பயன்படுத்துவேன் என்று இயேசு கிறிஸ்து சொன்ன வாக்குத்தத்தத்தின் படி தமிழ்நாடு, கிழக்கிந்திய மாநிலம், வடகிழக்கு மாநிலம், கர்நாடக, கேரளா மாநிலங்களிலிருந்து வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கென்று எழுப்புதலைப் பரவச் செய்வோர் முகாம் (Igniters) நடத்தப்பட்டது. கடந்த ஜூன் 15,16,17 ஆகிய தேதிகளில் ஆந்திரா தெலுங்கானா மாநிலங்களிலிருந்து 430 வாலிபர்கள் நாலுமாவடிக்கு வரவழைக்கப்பட்டு எழுப்புதலுக்காக ஜெபிப்பதின் அவசியத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதின் முக்கியத்துவத்தையும் குறித்து சகோ. மோகன் சி. லாசரஸ் சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்களும் விளக்கி சொல்லி ஜெபத்தில் நடத்தியபோது, அநேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது. வந்திருந்த அநேகர் தரிசனங்களை பார்த்து சாட்சி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். கலந்துகொண்ட வாலிபர்கள் அனைவரும் சுவிசேஷம் அறிவிப்போம் என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றிருக்கிறார்கள். சகோ. ஆனந்த் சகோ. திரித்துவம் அவர்கள் தேவ செய்திகளை தெலுங்கில் மொழிபெயர்த்து உதவினார்கள். சகோ. ஜவஹர் அவர்கள் பாடல் ஆராதனை வேளையை பொறுப்பெடுத்து நடத்தினார்கள். அதோடு சகோ. பன்னீர்செல்வம் மற்றும் சகோ. மனோவா அவர்களும் பாடல்களை பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம் 2022

## ஆந்திரா – தெலுங்கானா




Spread the Reival Fire

# RED Alert

## ! ஓப்னி மற்றும் பினெகாஸ்



நிகழ்வு காலேப்

ஒவ்வொரு மாதமும் இந்த Red Alert தொடரின் மூலம், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அவர்கள் செய்த தவறினாலும், எச்சரிப்பை அலட்சியப்படுத்தினதினாலும், தங்கள் சந்ததிக்கே சாபத்தையும், அழிவையும் தேடி தந்தார்கள் என்று பார்த்து கொண்டு வருகிறோம். இந்த Red Alert தொடரின் மூலம் தேவன் நம் ஒவ்வொருவரோடும் இடைப்பட்டு, நாம் ஆவிக்குரிய வாழ்வை சரி செய்து கொண்டிருக்கிறார். இந்த Red Alert தொடரில் கர்த்தரின் ஆசாரிய ஊழியத்தை செய்ய தெரிந்துகொள்ளபட்ட ஓப்னி மற்றும் பினெகாசை குறித்து பார்க்க போகிறோம்.

ஆரோனைப் போல அழைக்கப்படாவிட்டால் யாரும் இந்த ஊழியத்திற்கு தானாய் ஏற்படுத்தப்படுகிறதில்லை என்று நாம் வாசித்திருப்போம். அப்படி கர்த்தருடைய பார்வையில் விஷேசித்த ஊழியமாக கருத்தப்பட்டது ஆசாரிய ஊழியம். இந்த ஊழியத்திற்கு கர்த்தரே ஆசிரியர்களை தெரிந்துகொள்ளுகிறார். இப்படிப்பட்ட கனமான ஊழியத்தைச் செய்ய அழைக்கபட்ட ஒப்னியும், பினெகாசும், அதை பரிசுத்தமாகவும், கர்த்தருக்கு பிரியமாகவும் செய்யாமல் தங்களுடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றி கர்த்தருடைய ஆலயத்தை தீட்டுபடுத்தினார்கள். அதின் விளைவாக அவர்கள்



அவர்களுக்கு மாத்திரம் அல்ல சந்ததிக்கே சாபத்தைத் தேடிக் கொண்டார்கள். அவர்கள் வீழ்ச்சிக்கு காரணம் என்ன?

### கர்த்தரை அறியவில்லை

**(ஏலியின் குமாரர்கள்!)**

1 சாமு 2:12 வசனத்தில், ஏலியின் குமாரர்கள் கர்த்தரை அறியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தரைக் குறித்து அறிந்து கொள்ளாமலேயே, அவர் ஊழியத்தைச் செய்வது ஆபத்தானது. ஆனால் இங்கே ஓப்னியும், பினெகாசும் கர்த்தர் எவ்வளவு பெரியவர், பரிசுத்தர், அவரின் வல்லமை, மகிமை எவ்வளவு பெரியது என்று அறிந்துகொள்ளாமல் தங்கள் விருப்பதின்படி ஊழியம் செய்து வந்தார்கள். கர்த்தருக்கு பிரியமில்லாத, அருவருப்பான பாவங்களை கர்த்தருடைய ஆலயத்தில் துணிகரமாக செய்து வந்தார்கள். கர்த்தரை குறித்த அறிவு இல்லாத இடத்தில் துணிகர பாவம் நிச்சயம் இருக்கும். நாமும் கூட கர்த்தரைக் குறித்த அறிவு இல்லாமல் ஊழியம் செய்ய முடியும். ஆனால் அதன் விளைவு நமக்கு ஆபத்தாக முடிந்து விடும். நாம் எப்படிப்பட்ட ஊழியத்தை செய்கிறோம் என்று யோசித்து பார்ப்போம். மற்றவர்களுக்காக, பார்வைக்காக, நம்முடைய சுயநலத்திற்காக செய்கிற

ஊழியம் நமக்கே பாதிப்பை ஏற்படுத்தி விடும். அப். பவுல் உலகத்தின் பல நாடுகளுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்றவர், அவர் ஊழியத்தின் வெற்றியின் இரகசியம் பிலி. 3:8ல் இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணினார்.

## கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளவில்லை!

கர்த்தரைக் குறித்த அறிவும், பயமும் இல்லாததத்தினால், ஏலியின் குமாரர்கள் கர்த்தருடைய கட்டளைகளை மீறி நடந்தார்கள். மக்கள் கொண்டு வந்த பலிகளில் ஆசாரியர்களுக்கும் ஒரு பங்கை கர்த்தர் நியமித்திருந்தார். ஆனால் பலியிலிருக்கும் கொழுப்பு முற்றிலும் தகனிக்கப்பட்ட பின்பே அதை எடுத்து கொள்ள வேண்டும், ஆனால் ஏலியின் குமாரர்கள் அதற்கு முன்பே அதை எடுத்துக் கொண்டார்கள் (1 சாமு. 2:15). அதனால் கர்த்தரின் பார்வையில் அவர்கள் பாவம் பெரிதாயிருந்தது (1 சாமு 2:17). கர்த்தரின் ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்ட நாம் அவர் கட்டளைகளை கைக்கொள்ளுகிறோமா? என்பதை நிதானித்து பார்ப்போம்.



## எச்சரிப்பை அலட்சியப்படுத்தினார்கள்!

ஏலி தன் குமாரர்கள் செய்யும் துன்மார்க்கத்தை கேள்விப்பட்டு, அவர்கள் இருவரையும் எச்சரித்தார், ஆனால் ஏலியின் எச்சரிப்பிற்கு செவி கொடாமல் தங்கள் இருதயத்தை கடினபடுத்தினார்கள். இதனால் கர்த்தர் அவர்களை நிர்மூலமாக்க நினைத்தார். தொடர்ந்து பாவத்தை செய்து, கர்த்தரின் கட்டளைக்கு கீழ்படியாமல் நடந்து, எச்சரிப்பை அலட்சியபடுத்தினதினால் (1 சாமு. 4:11) ஏலியின் குமாரர்கள் யுத்தத்தில் மரித்து



போனார்கள். அதுமாத்திரமல்ல தங்கள் சந்ததிக்கே சாபத்தைத் தேடிக் கொண்டார்கள்.

**அன்பான வாலிபர்களே, ஒருவேளை நான் ஒப்னி, பினெகாஸ் அளவிற்கு பாவம் செய்யவில்லையே என்று நீங்கள் யோசிக்கலாம். அவர்களை விட பெரிய பாவத்தையா நான் செய்து விட்டேன் என்று நாம் செய்யும் தவறை நியாயப்படுத்த நினைக்கலாம். ஆனால் நாம் செய்யும் சிறிய தவறும், எச்சரிப்பை அலட்சியப்படுத்துவதும் நம்மை அழிவின் விழும்பில் கொண்டு வந்து நிறுத்தி விடும், அப்போது நாம் மனந்திரும்ப நினைத்தாலும் அதற்கு காலமும், சமயமும் கிடைக்காது. எனவே நமக்கு இருக்கும் இந்த காலத்தில், நம் குறைவுகளை, பெலவீனங்களை ஒப்புக்கொண்டு, நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்துவோமானால், நம்மை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பரிசுத்தப்படுத்தி, எழுப்புதலில் பயன்படுத்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.**

**“ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்” (2 தீமோ. 2:21) ■**

# Revival IGNITERS

## EVERY 1ST SUNDAY

**(3RD JULY)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsemane Prayer CenterSekinah Mahal Mullai Nagar
9750955548 / 8344949555

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 2ND SATURDAY

**(9TH JULY)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(10TH JULY)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Branch Office1st floor, HH Complex Near Nam Nadu Then kadai 216, Neahruji Road.8344411022
9442885315

**KOVILPATTI (3PM - 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30)**
Hendry Matric Higher Secondary School
Mela Sathankulam
Ct: 9442885315

## EVERY 3RD SUNDAY

(17TH JULY)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode.
9750722000

## EVERY 4TH SATURDAY

(22ND JULY)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY

(23RD JULY)

**THIRUVALLUR (3-5:30)**
Gethsamane Prayer Center
H S R Tower, 2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

## MUMBAI (5PM - 8PM)

1st sunday - Dharavi
2nd Sunday- Bhandup
3rd Sunday - Malad
9004882470

WE'RE GOING LIVE

# REVIVAL IGNITERS

ON SUNDAY JULY 30TH,
TIME: 3 TO 5PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

YouTube

# செய்திகள்!

## 32 ஆண்டுகால சேவைக்கு பிறகு விடை பெற்றது இந்திய கப்பல் படையை சேர்ந்த ஐ.என்.எஸ் அக்சய், ஐ.என்.எஸ் நிஷான்க் போர் கப்பல்கள்!

மும்பை: இந்திய கப்பல் படையை சேர்ந்த ஐ..என்.எஸ் அக்சய் மற்றும் ஐ.என்.எஸ் நிஷான்க் போர் கப்பல்கள் 32 ஆண்டுகால சேவைக்கு பிறகு விடை பெற்றன. கடற்படை பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட இந்த போர் கப்பல்கள் ஒய்வு பெறும் விழா மும்பை கடற்படை தளத்தில் பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது. வீரர்கள் மரியாதைக்கு பிறகு இரண்டு போர் கப்பல்களிலிருந்த கொடிகள் இரக்கப்பட்டன.

தொடர்ந்து ஏவுகணை போர் கப்பாலான அக்சய் பணிநீக்கம் செய்யப்பட்டது. கார்கில் போர் நடந்த போது இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. அப்போது இரு கப்பல்களும் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டதாக கப்பற்படை தலைமை தளபதி ஹரிகுமார் தெரிவித்தார். இரு போர் கப்பல்களும் பயிற்சி வீரர்கள் பலருக்கு பணி அனுபவங்களை கொடுத்ததாக அவர் பாராட்டு தெரிவித்தார்

- தினகரன், 04 ஜுன் 2022.

**என்ன இப்படியாகி போச்சு!: எல்.ஐ.சி.யின் சந்தை மதிப்பு ரூ.5 லட்சம் கோடிக்கும் கீழ் சரிந்தது... முதலீட்டாளர்கள் அதிர்ச்சி..!!**

டெல்லி: எல்.ஐ.சி.யின் சந்தை மதிப்பு ரூ.5 லட்சம் கோடிக்கும் கீழ் சரிந்ததால் முதலீட்டாளர்கள் பேரதிர்ச்சி அடைந்தனர். இந்திய பங்கு சந்தைக்குள் சமீபத்தில் எல்.ஐ.சி நிறுவனம் காலடி வைத்தது. மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் எல்.ஐ.சி. பங்குகள் கடந்த மே 17ம் தேதியன்று பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டது. இதற்கு பல்வேறு பொருளாதார நிபுணர்கள் கடும் எதிர்ப்புகளை பதிவு செய்து வந்தனர். எல்.ஐ.சி. பிரியர்கள் இந்த நடவடிக்கையில் ஒன்றிய அரசு இறங்கக்கூடாது என வலியுறுத்தி வந்தனர். ஆனால் இதுவரை இல்லாத வகையில் மிகப்பெரிய அளவில் எல்.ஐ.சி. பங்குகளை சுப்ஸ்கிரைப் செய்யக்கூடிய சூழல் நிலவியது.

பெருவாரியான முதலீட்டாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு எல்.ஐ.சி.யின் ஐ.பி.ஓ.வை பதிவு செய்து பங்குகளை வாங்கினர். எல்.ஐ.சி. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட அன்றைய தினமே கடுமையான சரிவுக்குள்ளானது. இதனால் முதல் நாளே முதலீட்டாளர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. தொடர்ந்து அடுத்தடுத்த நாட்களிலும் பங்கு வர்த்தகத்தில் எல்.ஐ.சி.யின் பங்குகள் விலை குறைந்து கொண்டே வந்தது. இந்நிலையில் எல்.ஐ.சி. சந்தை மதிப்பு ரூ.5 லட்சம் கோடிக்கும் கீழ் சரிந்துள்ளது. பங்குச்சந்தையில் இன்று ஒரே நாளில் எல்.ஐ.சி. பங்குகள் ரூ.14 வரை குறைந்ததால் ரூ.786.20க்கு விற்பனையாகி வருகிறது.

பங்கு ஒன்று ரூ.949 விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட எல்.ஐ.சி. பங்கின் விலை ரூ.163 வரை சரிந்துள்ளது. இதன் மூலம் பங்கு ஒன்று ரூ.889 விலையில் வாங்கிய எல்.ஐ.சி. பாலிசிதாரர்களுக்கு பங்கு ஒன்றுக்கு ரூ.103 வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. ரூ.6 லட்சம் கோடி சந்தை மதிப்புடன் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட எல்.ஐ.சி.யின் தற்போதைய மதிப்பு ரூ.4,97,113 கோடியாக பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எல்.ஐ.சி. நிறுவனத்தின் சந்தை மதிப்பு வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ரூ.5 லட்சம் கோடிக்கு கீழ் சரிந்திருப்பதால் பங்குகளை வாங்கியவர்களின் நிலை பரிதாபமாகியுள்ளது

- தினகரன், 06 ஜுன் 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம் 5 கோடி ஆதாயம் VISION 2030

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**இயேசு விடுவிக்கிறார்**
**வாலிபர் ஊழியம்**

# 10 கோடி

**வாலிபர்களுக்கு சுவிசேஷம்**

# 1 கோடி

**வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த**

**15 மணி நேர ஜெபத்திட்டம்**

**தினமும் இந்த தரிசனத்திற்காக**

**30 நிமிடம் ஜெபிப்பேன்**

DAY - 1 DAY - 2 DAY - 3 DAY - 4
DAY - 5 DAY - 6 DAY - 7 DAY - 8
DAY - 9 DAY - 10 DAY - 11 DAY - 12
DAY - 13 DAY - 14 DAY - 15 DAY - 16
DAY - 17 DAY - 18 DAY - 19 DAY - 20
DAY - 21 DAY - 22 DAY - 23 DAY - 24
DAY - 25 DAY - 26 DAY - 27 DAY - 28
DAY - 29 DAY - 30

Name............................................................

Mobile..........................................................

Place...........................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 06 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.


இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# வாலிபர் கொண்டாட்டம்

நாலுமாவடியில்..

ஆகஸ்ட் 15 திங்கள்கிழமை காலை 9 மணி முதல்
மதியம் 2:30 மணி வரை

இடம் : தேவனுடைய கூடாரம், நாலுமாவடி

செய்தியும் ஜெபமும்

சகோ. மோகன் சி லாசரஸ்

தொடர்புக்கு 9750955547 / 9442885315

வாலிபர்களே உங்கள் நண்பர்களோடு
இக்கூடுகையில் பங்குபெறுங்கள்!
உடனே பதிவு செய்யுங்கள்!
Free registration:
youth.jesusredeems.com
அனுமதி இலவசம்!

இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்




சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547

